JANASAKTHI போன்: 84097 4 பக்கம் ஒரு அணு மலர் 8 இதழ் 251 இலங்கை 10 சதம் REGD. NO. M. 5934

ஜனசக்தி

சென்னை	நந்தன, ஆவணி 12உ	புதன்கிழமை	1952, ஆக. 27
வெளியூர்	நந்தன, ஆவணி 13உ	வியாழக்கிழமை	1952, ஆக. 28

யுத்த செலவும் மக்கள் துயரமும்

புதுடில்லி, ஆக. 26—

ராணுவ செலவுக்கு அமெரிக்க சர்க்கார் 10 ஆயிரம் கோடி டாலர் செலவழிக்க முடிவு செய்துள்ளது. சீனு நீங்கலாக உள்ள ஆசிய நாடுகளில் 80% கோடி மக்களின் தேசிய வருட வருமானம் 1950-ல் 4600 கோடி டாலர் தான். தென்னமரிக்காவிலுள்ள 10 கோடி 70 லட்சம் மக்களின் வருட வருமானம் 1800 கோடி டாலர் தான்; ஆப்பிரிக்காவிலுள்ள 19 கோடி 80 லட்சம் மக்களின் வருட வருமானம் 1400 கோடி டாலர் தான்.

ஆகவே, 111 கோடி மக்கள் வாழும் 3 கண்டங்களின் தேசிய வருமானத்தை விட 40 மடங்கு அதிகம் அமெரிக்கா ராணுவச் செலவு. —அகில இந்திய சமாதான கவுன்சில்.

யுத்தக் கைதிகள் விடுதலைக்கு 10 லட்சம் கையெழுத்து

புதுடில்லி, ஆக. 27—

கொரியாவில் யுத்தக் கைதியாகவுள்ள ஒரு அமெரிக்க சிப்பாயின் தந்தை ஆர். எல். காண்டர் என்ற [illegible] அமெரிக்க யுத்தக் கைதிகள், கொரிய, சீன யுத்தக் கைதிகளின் பட்டியலில் காணப்பட்ட கைதிகளின் பெற்றோர்களைக் குறித்து, கைதிகளைப் பரிமாறிக்கொள்ள வேண்டுமென்று மகஜர் சமர்ப்பிக்க வேண்டுமென்று அந்தப் பெற்றோர்களுக்கு எழுதியுள்ளார். 10 லட்சம் பேர் கையெழுத்திட்ட மகஜர் ட்ரூமனுக்கும் அக்கேசனுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. —அகில இந்திய சமாதான கவுன்சில்.

"ஹிந்துப் பத்திரிகையை நம்பாதீர்கள்"!

"வாரம்குத்தகைதாரர்களுக்கு 40 சத விகிதம் போதாது"

"காலம் மாறிவிட்டதை கருத்தில் வையுங்கள்"

மிராசுதார்களிடையே முதன் மந்திரி

தஞ்சாவூர், ஆக. 26—

'இந்து' பத்திரிகை அவசரச் சட்டத்தைப்பற்றி எழுதிய அபிப்பிராயத்தை மிராசுதார்கள் படித்து ஏமாந்துவிடக்கூடாதென்றும், நிலச்சுவான்தார்களின் சொத்துக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும்பொழுது இவ்விதப் பெரும் ஆபத்திலிருந்து பாதுகாக்க இன்று இந்த அவசரச் சட்டத்தின்மூலம் ஒரு சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும், இது மிகவும் நியாயமான சலுகைகளென்றும், இவைகளை ஒப்புக்கொள்ள நிலச்சுவான்தார்கள் மறுப்பார்களேயானல் அவர்களுக்கே பெரும் ஆபத்து ஏற்படுமென்றும் முதன் மந்திரி திரு. சி. ராஜகோபாலாச்சாரி இன்று நடந்த தஞ்சை நிலச்சுவான்தார்கள் கூட்டத்தில் எச்சரிக்கை செய்தார்.

"இந்த அவசரச் சட்டம் கவர்னரால் கையெழுத்திடப்படவில்லை. இது கடவுள் கொண்டுவந்த அவசரச் சட்டமென்று நீங்கள் மதிக்க வேண்டு"மென்று மிராசுதார்களை முதன் மந்திரி வேண்டினர்.

"அவசரச் சட்டத்தைப் பற்றி இந்து பத்திரிகையில் வெளியான தலையங்கம் உண்மையான நிலைமையைத் தெரிந்து கொள்ளாது அவசரப்பட்டு எழுதப்பட்டுள்ளது. ஹிந்து ஆசிரியர்கள் எனது நண்பர்கள்தான். எனது மகன்கூட அங்கிருக்கிறார். ஒரு சமயம் இவரே அதை எழுதியிருக்கலாம். என்னுடைய குறை என்னவெனில் ஹிந்து தஞ்சையிலுள்ள பிரத்தியட்ச நிலைமையை உணர்ந்துகொள்ளவில்லை என்பதுதான். அதனால்தான் 'இந்து' பத்திரிகையை படித்துக் கெட்டுப்போகாதீர்களென்று உங்களை எச்சரிக்கிறேன். 'இந்து'ப் பத்திரிகையை நடத்துபவர்கள் 10 நாளைக்கு அசம்பிளியில் வந்து நான் இருக்கும் ஸ்தாபனத்தில் இருந்து பார்த்தால் உண்மை நிலையை உணர்வார்கள். அதன்பிறகு அவர்கள் இதைவிட தீவிரமான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருப்பார்கள். 'இந்து'ப் பத்திரிகையிலுள்ளவர்களுக்கு விவசாயத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்திருக்கலாம். ஆனால் இன்றுள்ள நிலைமையை அவர்கள் புரிந்துகொண்டு அதை நியாயமான முறையில் எவ்விதம் தீர்ப்பது என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை" என்றார்.

பண்ணையாட்களின் சம்பளம்

மேலும் பேசுகையில் "இதே இந்துப் பத்திரிகை சில நாட்களுக்கு முன்பு பண்ணையாட்களைப்பற்றி ஒரு விமர்சனம் எழுதியது. அதில் பண்ணையாட்கள் வருஷம் 365 நாட்களும் வேலை செய்வதில்லையென்றும் எனவே வேலை செய்யும் நாட்களுக்குத்தான் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று ஹிந்து பத்திரிகை எழுதியது. நான் கேட்கிறேன் மிராசுதாரர்களும் பெரிய நிலப்பிரபுக்களுமாகிய நீங்கள் வருஷம் 365 நாட்களும் வேலை செய்கிறீர்களா? உங்களது நிலத்தை நீங்களே சாகுபடி செய்ய முடியாமல் இன்று பிறரிடத்தில் சாகுபடிக்கு விடுகிறீர்கள். நீங்கள் சொல்லலாம் சாகுபடியை மேற்பார்வை இடுகிறோம் என்று. இந்த மேற்பார்வையின் அர்த்தத்தை எல்லோரும் அறிவர். மேற்பார்வை செய்வதாக நிலப்பிரபுக்கள் பாசாங்கு செய்கிறார்கள். வேலை செய்த நாட்களுக்குத்தான் பண்ணையாட்களுக்கு சம்பளம் கொடுப்பது என்றால், பாக்கி நாட்களுக்கு அவர்கள் எங்கு செல்வார்கள்? தன் ஊரை விட்டுச் சென்று வேறு ஏதாவது வேலை பார்க்க சென்றுவிட்டால் விவசாய காலத்தில் அவன் எவ்விதம் நிலச்சுவான்தார்களுக்குக் கிடைப்பான். எனவே ஹிந்துப் பத்திரிகையின் வாதம் சரியல்ல. எனவே நியாயத்தையும், நீதியையும் அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் பண்ணையாட்களுக்கு வருஷம் பூராவும் சம்பளம் கொடுப்பது அவசியம்" என்றார் முதன் மந்திரி.

மற்ற பிரதேசங்களில் அதிக வாரம்

சென்னை ராஜ்யத்தின் மற்ற இடங்களில் அதிக வாரம் குத்தகை விவசாயிகளுக்குக் கிடைக்கிறது என்பதை ராஜாஜி எடுத்துக் காட்டி அவசரச் சட்டத்தில் 40 சத விகிதம் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப் பட்டது அதிகமில்லை என்று கூறினர். எவ்வித நிபந்தனை இல்லாமல், தயக்கமில்லாமல் இந்த அவசரச் சட்டத்தை ஏற்று முழு மனதுடன் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று மிராசுதார்களை முதன் மந்திரி கேட்டுக்கொண்டார். முடிவில் நிலச்சுவான்தார்களுக்குத்தான் இது சாதகமாக இருக்குமென்று ராஜாஜி எடுத்துக் காட்டினர்.

ஏற்க மறுத்தால் நிலச்சுவான்தார்கள் எல்லாவற்றையும் இழக்க நேரிடும் என்று எச்சரித்தார்.

இந்த அவசரச் சட்டத்தை ஏற்று நிலச்சுவான்தார்கள் நடைமுறைக்குக் கொண்டுவந்தால் இப்படிப்பட்ட ஆபத்து வராமல் நிலச்சுவான்தார்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்றார்.

உழுபவனுக்கு நிலத்தில் பாத்தியம் இருக்கும் என்பதை நிலச்சுவான்தார்கள் ஒப்புக்கொண்டாலொழிய அவர்களுக்கு நன்மை ஏற்படாது என்று முதன் மந்திரி கூறினர். இன்றுள்ள ஆபத்தான காலப் போக்கை மிராசுதார்கள் நன்கு உணர்ந்து முணுமுணுக்காமல் காலத்திற்குத் தக்கபடி தாங்களும் மாற வேண்டுமென்று நிலச்சுவானதார்களை வேண்டினர்.

வாரம் குத்தகைதாரர்களுடன் அவர்களின் நியாயமான வாரம் குத்தகையைப் பற்றிப் பேரம் பேசும் நிலைமையில் நிலச்சுவான்தார்களிருக்கும் பொழுது, அவர்கள் இன்று தங்களுடைய உரிமைகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து பிரயோஜனமில்லை என்று எச்சரித்தார். இந்த நியாயமான நிபந்தனைகளை இன்று நிலச்சுவான்தார்கள் ஒப்புக் கொள்ளவில்லை எனில் அவர் கையிலுள்ளது எதுவுமே மிஞ்சாமல் போகக்கூடிய காலம் வந்தாலும் வரும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே தான முயற்சி செய்வதாக முதன மந்திரி கூறினர்.

வாரங் குத்தகைதாரர்களுக்கு தனக்கு நிலத்தில் 10 வருஷ அனுபவம் இருக்கிறதென்று உணர்ந்தால் சாகுபடியில் அதிக உற்சாகம் கொள்வார்கள். ஆனால் 5 வருஷ உத்தரவாதந்தான் கொடுத்திருக்கிறதென்றார். தன்னுடைய ஆலோசனையை ஏற்றால் நிலைமை அபிவிருத்தி அடைந்து 4வது வருஷத்தில தொடர்ந்து அதே வாரங் குத்தகைதாரரே விவசாயம் செய்யச் சொல்லும் நிலைமை ஏற்படும் என்றார்.

"இரண்டு மரக்கால் கூலி ஒரு நாளும் அதிகமல்ல. நிலச்சுவான்தார்கள் இ[illegible] சம்பளத்தைப் ப[illegible]ட்களுக்குக் கொடுக[illegible] தோஷத்[illegible] துடன்[illegible] மென்றார் [illegible]

சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு இல்லை

ராஜாஜி அறிவிப்பு

தஞ்சை, ஆக. 27—

"பஞ்சப்படி அலவன்ஸ் வாழ்க்கைச் செலவுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை அடிப்படைச் சம்பளத்துடன் ஒன்றுசேர்ப்பது உகந்ததல்ல" என்று முதல் அமைச்சர் திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் என். ஜி. ஓ. ஊழியர்களின் மனைவிமார் சங்கத்தின் தூது கோஷ்டியினரிடம் கூறினர்.

தங்கள் கணவர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும், அத்துடன் பஞ்சப்படியையும் சேர்க்க வேண்டுமென்றும் தூதுகோஷ்டியினர் கேட்டுக்கொண்டனர்.

தற்போதைய நிதி நிலைமையில் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு செய்தாகிவிட்டது. ராஜ்யத்தின் நிதி நிலைமை மேலும் அபிவிருத்தியடைந்தாலொழிய, சம்பளம் அதிகரிக்க முடியாது என்று முதலமைச்சர் மேலும் அறிவித்தார்.

அவசரப் பிரேரணை நிராகரிப்பு

லக்ஷ்மணபுரி, ஆக. 25—

நேபாள கிசான் இயக்கத்தை நசுக்குவதற்காக ஆயுதந்தரித்த போலீஸ் படைகளை சேர்த்து வருவது சம்பந்தமாக விவாதிக்க வேண்டுமென்று, உத்தர்பிரதேஷ் புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஜர்கன்டே ராய் கொண்டுவந்த அவசரத் தீர்மானத்தை சபாநாயகர் நிராகரித்து விட்டார்.

ஹைதராபாத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

ஹைதராபாத், ஆக. 26—

சுமார் 1000 பொது வேலை இலாகா ரோடு தொழிலாளிகள் தங்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்பதனால் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்.

சம்பள உயர்வு, பஞ்சப்படி உயர்வு, 6 மாதம் வேலை செய்தவர்களுக்கு வேலை நிரந்தரம்—ஆகியவை அவர்களது கோரிக்கைகள்.

ஆந்திர மாகாணப் பிரச்சினை

சென்னையை தமிழ்நாட்டிலிருந்து பிரித்து கவர்னர் கன்ட்ரோலில் வைப்பதாம்

கவர்னரும் சரி என்கிறார்

விஜயவாடா, ஆக 26—

சமீபத்தில் சுவாமி சீதாராம் சென்னைக்கு வந்திருந்த பொழுது கவர்னரைச் சந்தித்துப் பேசினரல்லவா? அப்பொழுது, சென்னை இராச்சியத்தை தமிழ்நாடு, ஆந்திரா, இராச்சியங்களாக கூறு போடுவதென்றும், இரண்டையும் ஒரே கவர்னர் நிர்வகிப்பதென்றும், சென்னை நகரத்தை கவர்னர் தனது நேரடியான கன்ட்ரோலில் வைத்துக்கொள்வதென்றும் கவர்னர் ஸ்ரீ பிரகாசாவுக்கு சீதாராம் யோசனையளித்தார். அந்த யோசனைகளை கவர்னர் அங்கீகரித்துள்ளார்.

சீதாராமுடைய நெருங்கிய சகபாடியும், ஆந்திர மாகாண ஸ்தாபகக் கமிட்டி செயலாளருமான திரு. வெங்கடாசலபதி இதை "மெயில்" நிருபருக்கு அளித்த பேட்டியில் வெளியிட்டார்.

இந்த யோசனைகளின் அடிப்படையில் விஷயத்தை முடித்துவிட முடியும் என்று கவர்னர் சீதாராமிடம் கூறியிருக்கிறார்.

விஜயவாடா வழியாகத் திரும்பிச் செல்கையில் மத்திய சர்க்கார் உணவு மந்திரி கித்வாயும் இந்த மாதிரியான யோசனையை வெளியிட்டிருக்கிறார். இதை ஆந்திர பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

அஜாய் கோஷ் சுற்றுப்பிரயாணம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் அஜாய்குமார் கோஷ் தோழர் பி. ராமமூர்த்தியுடன் 31-8-52ல் மதுரைக்கும், 1-9-52ல் திண்டுக்கல்லுக்கும் விஜயம் செய்வார்.

சோஷலிஸ்ட்-பிரஜா சங்கமம் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு ஏற்பாடே!

தோழர் அருணா அறிக்கை

புதுடில்லி, ஆக. 26—

"ஒரு புறத்தில் சோஷலிஸ்ட்-பிரஜா கட்சிகள் சங்கமமும், மறுபுறத்தில் கம்யூனிஸ்டுகளை எதிர்ப்பதற்காக கம்யூனிஸ்டல்லாத மார்க்ஸிஸ்ட் கட்சிகள் திட்டம் வகுத்திருப்பதும், ஓங்கி வளர்ந்து வரும் உழைப்பாளி மக்களின் ஒற்றுமையை வேண்டுமென்றே பலவீனப் படுத்துவதற்காகத்தான" என்று இடதுசாரி சோஷலிஸ்ட் தலைவர் தோழர் அருணா ஆசப் அலி ஒரு பத்திரிகை அறிக்கையில் குறிப்பிட்டார்.

"இப்படிப்பட்ட நிலைமையில், இந்த பிளவுபடுத்தும் சாணக்கிய தந்திரங்களை முறியடிப்பதற்காக எல்லா மார்க்ஸிஸ்ட் குழுக்களும் உண்மையான சோஷலிஸ்டுகளும் ஒன்றுபட்டு வழிவகைகளைத் தேடவேண்டும்" என்று மேலும் குறிப்பிட்டார்.

"இந்த கம்யூனிஸ்ட் எதிர்ப்புச் சங்கமமும், இணைப்புகளும் சிருஷ்டித்துள்ள நிலைமையை பரிசீலிப்பதற்காகவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பலப்படுத்துவதற்காக என்னென்ன செய்ய வேண்டுமென்பதுபற்றி முடிவுகட்டுவதற்காகவும் இடதுசாரி சோஷலிஸ்ட் குழுவின் ஸ்தாபன அமைப்புக் கமிட்டி பம்பாயில் செப்டம்பர் மாதம் 20, 21-ம் தேதிகளில் கூடும் என்றும் தோழர் அருணா அறிவித்தார்.

தென் ஆப்ரிக்க போராட்டம்

வெள்ளையரல்லாதாருக்காதரவாக வெள்ளை மாணவர்கள்!

இதுவரை 3,198 பேர் கைது!

ஆப்ரிக்கா பிளவுபடுமா?

ஜோஹன்ஸ்பர்க், ஆக. 27—

இன்று நிறவெறிச் சட்டங்களை எதிர்த்த 426 ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். இதில் ஒரு இந்தியப் பெண்ணும், ஒரு ஆப்ரிக்கப் பெண்ணும் உள்ளார்கள். இயக்கம் ஆரம்பித்த 2 மாதங்களில் இவ்வளவு பேர் ஒருங்கே கைது செய்யப்படுவது இதுதான் முதல் தடவை.

இவர்கள் கைது செய்யப்படும் இதே நேரத்தில்தான், ஜோஹன்ஸ்பர்க் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் 20 ஆப்பிரிக்க, இந்தியத் தலைவர்களின் விசாரணை நடைபெற்றது. இந்தத் தலைவர்கள் மீது, கம்யூனிஸ லட்சிய வெற்றிக்கு ஊக்கமளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

நேற்றைய சம்பவங்களில் இந்தியர்கள், ஆப்பிரிக்கர்கள் கலப்பு நிறத்தவர்கள் யாவருமே கலந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

கம்யூனிஸ ஒழிப்பு சட்டத்தின்கீழ் இரண்டு ஆப்பிரிக்க மாணவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து ஜோஹன்ஸ்பர்க் பல்கலைக்கழக மாணவர்கள், பெரும்பாலோர் வெள்ளையர்கள், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிற்கு வந்தார்கள்.

ஆறிலிருந்து 18 வயதுவரையுள்ள நூற்றுக் கணக்கான இந்திய பள்ளிக்கூட சிறுவர் சிறுமியர், "காங்கிரஸ் மீது கை வைக்காதே" "தலைவர்களை விடுதலை செய்" என்பன போன்ற கோஷங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கிக் கொண்டு, பள்ளிகளை விட்டு வெளியேறி டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸின் தலைமைக் காரியாலயத்திற்கு ஊர்வலமாக வந்தார்கள்.

டர்பன், ஆக. 26—

நூற்றுக் கணக்கான வெள்ளையரல்லாதார் கூட்டமொன்றில், நேடாலிலுள்ள வெள்ளையரல்லாதார் முதன் முறையாக நிறவெறி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபடுவது என முடிவு செய்யப்பட்டது.

நேபால் இந்திய காங்கிரஸ் தலைவரான டாக்டர் நாயக்கர் தலைமையில் ஊழியர்கள் நிறவெறிச் சட்டங்களை மீறுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

இயக்கம் ஆரம்பிக்கும் தேதி, டர்பனில் ஆக. 31-ல் நடக்கும் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

இந்திய அரசாங்கம், நிறவெறி எதிர்ப்பு இயக்கப் பிரச்னையை ஐ. நா.வில் கொண்டு போவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை வரவேற்று ஜோஹன்ஸ்பர்க் ஆப்ரிக தேசிய காங்கிரஸ் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.

ஆப்ரிக்கா பிளவு படுமா?

நேடால், ஆக. 26—

குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் நேடால், யூனியனிலிருந்து பிரிய வேண்டுமா என்பது பற்றி நடந்த விவாதக் கூட்டமொன்றில் பார்லிமெண்டு மெம்பர்கள், மாகாண கவுன்ஸில் அங்கத்தினர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

48 பேர் "பிரியக்கூடாது" என ஓட்டளித்தனர். இதில் ஐக்கிய கட்சி மெம்பர்கள் சேர்ந்துள்ளனர்.

தொழிற்கட்சி மெம்பர்களுட்பட 41 பேர் சில சந்தர்ப்பங்களில் பிரியவேண்டியதுதான் என ஓட்டளித்தனர்.

மகாநாட்டில் அடுத்த தேர்தலில் நேடால் ஐக்கிய ஜனநாயக முன்னணியே வெற்றி பெற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

மேலும் வெள்ளையரல்லாதாருக்கு சமத்துவ மளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஜோஹன்ஸ்பர்க், ஆக. 27—

ஐரோப்பியருக்காக ரிஸர்வ் செய்யப்பட்ட முதல் வகுப்பு ரயில் வண்டியில் பிரயாணம் செய்த 21 பேர் கேப்டவுனில் போலீஸாரால் விசாரிக்கப்பட்டனர்.

போர்ட் எலிஸபெத்தில்

(2-ம் பக்கம் பார்க்க)

பாட்டுப்பாடியதற்காக துப்பாக்கிப் பிரயோகம்

கோஜே தீவில் அமெரிக்க கொலைகாரர்களின் அட்டூழியம்

38 வட கொரியக் கைதிகள் படுகாயம்

பூசான், ஆக. 26—

கோஜே [illegible]க் கொட்டடிகளில் [illegible] நிறுத்துவதற்கா[illegible] கொரிய யுத்தக் [illegible] அமெரிக்க ([illegible]காரிகள் கண்[illegible]ண்டுகளை யெறி[illegible]ப் பிர யோ[illegible]. 36 கைதிகள் [illegible]படுத்தப்பட்டனர்.

இந்த [illegible] ஆகஸ்ட் 11-ம் தேதி [illegible]திருந்தும் இ[illegible]ரையில் அமுக்கிவிடப்[illegible]தது. சிறை நிர்வாக [illegible]ல் மாறுதல் செய்து [illegible]ருந்ததால் இந்த [illegible] காலதாமதமாக வெளி[illegible]கிறது என்று ஒ[illegible] அதிகாரி கூறினர். 80 க[illegible]ணீர் வாயு குண்டுகள் போடப்பட்டன; பல ரவுண்டு [illegible] துப்பாக்கிப் பிரயோகம் [illegible]தது என்றும், ஒரு [illegible] ராணுவப் படை [illegible] தாக்குதலில் [illegible]றென்றும் அதிகாரி [illegible]னான்.

[illegible] பாடியதற்காகத் [illegible] அவர்கள்மீது துப்பாக்கிப் [illegible]ரயோகம் செய்யப்பட்[illegible]

சென்னை சட்ட சபை கம்யூனிஸ்டு கட்சி ஆபீஸ் வேலை நேரம்

சென்னை ஆக. 25—

இந்த ஆபீஸ் ஞாயிறு தவிர பாக்கி எல்லா நாட்களிலும் கீழே குறிப்பிட்ட நேரங்களில் திறந்திருக்கும்.

காலை	8-30லிருந்து	11-30	வரை
மாலை	2லிருந்து	4	வரை
மாலை	6லிருந்து	8	வரை

எங்களைப் பார்க்க விரும்புவோர் மேலே கண்ட நேரங்களில் வந்து பார்க்கவும். தபால் அனுப்ப விரும்புவோர்:

சட்ட சபைக் கம்யூனிஸ்டு கட்சி ஆபீஸ், க[illegible] மென்ட் ஹவுஸ் எஸ்[illegible] மவுண்ட் ரோ[illegible] சென்னை[illegible]

என்ற விலாசத்[illegible] எழுதவும்.

பாகிஸ்தான்-[illegible] பஞ்சு ஒ[illegible] மு[illegible]

[illegible]

பாகிஸ்தான் விமானம் மேற்கு பஞ்சாபில் விழுந்து நொறுங்கியது!

பிரயாணிகளனைவரும் கொல்லப்பட்டனர்!

கராச்சி, ஆக. 26—

ராயல் பாகிஸ்தான விமானப் படையைச் சேர்ந்த விமானமொன்று, பஞ்சாபிலுள்ள ஜீலம் ஜில்லாவில் விழுந்து நொறுங்கியது. முக்கியமான ராணுவ, போலீஸ் அதிகாரிகள் விபத்தில் கொல்லப்பட்டனர்.

மேற்படி விமானம், குண்டு வீச்சுப் பயிற்சிக்காக, தேவையான வெடி மருந்துப் பொருள்களை ஏற்றிக்கொண்டு லாகூரிலிருந்து பெஷாவருக்குச் சென்று கொண்டிருந்தது.

லியாகத் கொலை வழக்கை விசாரித்துக் கொண்டிருந்த [illegible]ஸ்தான் ஸ்பெஷல் [illegible]ஸ் இன்ஸ்பெக்டர்-[illegible]ரலான திரு. அப்த்தியால் உத்தீனும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார்.

லண்டனுக்கு விமானப் போக்குவரத்து ஆரம்பம்

பம்பாய், ஆக. 26—

12 நாட்கள் நிறுத்தப்பட்டிருந்த, "ஏர் இந்தியா" விமான ஸர்வீஸின், லண்டன் விமானப் போக்குவரத்து மீண்டும் இன்று துவங்கியது.

அரிசி விலை ஏற்றம்

காரைக்குடி, ஆக. 27—

ரேஷன் எடுத்தவுடன் படி 1க்கு 15 அணு விற்ற அரிசி இன்று படி ரூ. 1-5-0 பச்சரிசி 1-6-0 விலை ஏற்றத்தால். ரேஷன் கடையில் கூட்டம் அதிகமாய்விட்டது.

[illegible]யே மந்திரிகள்

[illegible]து விபரம் தெரிவிக்கவேண்டும்

[illegible]லை ஒழிக்கப் பெருமுயற்சி

[illegible]க. 26— எகிப்து பூராவிலும் உள்ள [illegible] எல்லா அரசியல் கட்சிகளும் [illegible]பனங்களும் கட்டாயமா[illegible] நிர்வாக இய[illegible] சுத்தப்ப[illegible] [illegible]ளைத் திருத்திய[illegible] [illegible]ண்டு, [illegible] [illegible]செய்யுமா[illegible]

பீகிங் சமாதான மகாநாட்டைப் பற்றி கிஸான் தலைவர்கள்

யாக்னிக், முக்கர்ஜி முழக்கம்

சென்னை, ஆக. 27—

நேற்று மாலை கோகலே ஹாலில் சென்னை சமாதானக் கமிட்டியின் சார்பில் திரு. கே. ஜி. சிவசாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

ஐக்கிய கிஸான் ஸ்தாபனத்தின் தலைவரான தோழர் இந்துலால் யாக்னிக் கூர்க்கப் படை முகாம்களைக் கலைக்க நேரு சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்றார். அதே சமயத்தில் கூர்க்கப் படைகளை நேபாளத்திலேயே திரட்ட பிரிட்டிஷாருக்கு முயற்சி செய்து வருவதாகத் தனக்கு தகவல் கிடைத்துள்ளதென்றும், அவ்விதம் நேப்பாளத்தில் கூ[illegible] படைகளை பிரிட்[illegible]ட்டிக்கொண்டு [illegible]பாக மலேயா [illegible]னுமதி கேட்[illegible]கார் அவ்வித[illegible] கொடுக்கக்கூடா[illegible] இ[illegible]யாக நடுநிலைமைக் பட்டினி[illegible]யை நேரு சர்க்கார் வேண்டுமோ. [illegible]த்த[illegible] கொரிய [illegible]லைசெய்யும் [illegible]க்கு உதவும் [illegible]த்தியக் கோஷ்டியை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டுமென்று தோழர் யாக்னிக் கோரினர்.

இரண்டே வருஷத்தில் சீனு சாதித்துள்ள அற்புதங்களை உணர்ச்சி ததும்பு முறையில் தான சீனுவில் பார்த்ததனைத்தையும் வர்ணித்தபின் பீகிங்கில் நடக்கப்போகும் ஆசிய சமாதான மகாநாடு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததென்றும், சமாதானப் பிரியர்கள் அனைவரும் அதற்குச் செல்ல வேண்டுமென்றார்.

அடுத்துப் பேசிய வங்காள விவசாயத் தலைவர் தோழர் விஸ்வநாத முகர்ஜி ஒவ்வொரு நாடும் தனது சுதந்திரத்தை அடைவதுதான் குறிப்பாக மலேயா, வியத்நாம், பர்மா, இந்தோனேசியா, இந்தியா, போன்ற நாடுகள் தங்களது சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், பரிபூரண சுதந்திரமும் அடையப் போராடுவதே பீகிங் சமாதான மகாநாட்டில் பிரதான அம்சமாக விளங்கப் போகிறதென்றும், எனவே சுதந்திரப் பிரியர்கள் அனைவரும் பீகிங் மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கோரினர்.

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் நமது பிறப்புரிமை அரசியல் சட்டத்தின் மூலம் அது பரிபூர்ணமாக உத்தரவாதம் செய்யப்பட்டாலொழிய நாம் ஓய்ந்திருக்கமாட்டோம்."

ஜனசக்தி

புதன்கிழமை 27-8-'52

தென் ஆப்பிரிக்கப் போராட்டம்

ஹிட்லர் மாண்டு மடிந்து 7 வருஷங்களாகின்றன. ஆயினும் ஹிட்லரிசம் இன்னும் மறைந்துவிடவில்லை. தென் ஆப்பிரிக்காவில் மலனுடைய ஆட்சி நாஜி ஆட்சியே தவிர வேறல்ல.

வெள்ளை நிறத்தவர்களே உயர்ந்த மனிதப் பிறவிகள்; அவர்களே ஆளப் பிறந்தவர்கள், கருப்பு நிறத்தவர்களும் இதர நிறத்தினரும் அடிமைகளாய் சேவகம் செய்ய வேண்டியவர்கள்" என்ற நாஜி தத்துவத்தை கடைப்பிடித்து தென் ஆப்ரிக்காவில் மலான் ஹிட்லர் தர்பார் நடத்தி வருகிறான்.

இன ஒதுக்கல் சட்டத்தின் கீழ் லட்சக் கணக்கான இந்தியர்களும், நீக்ரோ மக்களும், மற்ற மக்களுடன் சேர்ந்து வாழ முடியாமல் 'சேரி'களில் ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் அந்த எல்லையை விட்டு வேறிடங்களுக்குச் செல்லவோ, குடியேறவோ, வீடு வாங்கவோ, நிலம் வாங்கவோ முடியாது.

இத்தகைய அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து கூட்டம் போடும் உரிமை, கிளர்ச்சி செய்யும் உரிமை ஆகியவையும் மலான் ஆட்சியில் மறுக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமல்ல, தென் ஆப்ரிக்காவில் இதுவரை மலான் நிறவெறியை எதிர்த்து அங்கு வாழும் இந்திய மக்களும், நீக்ரோ மக்களும் மாத்திரம் கிளர்ச்சி செய்து வந்த நிலைமை மாறி, இன்று அங்குள்ள ஐரோப்பிய-வெள்ளை நிற-தொழிலாளி வர்க்கமும் இவர்களுடன் ஒன்றுபட்டு நின்று போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

வெள்ளைத் தொழிலாளி வர்க்கம்-இந்தியத்-தொழிலாளிகள்-ஆப்ரிக்கத் தொழிலாளிகள் ஆகியோரிடையே வளர்ந்து வரும் ஒற்றுமையைக் கண்டு, ஒன்றுபட்ட நடவடிக்கைகளைக் கண்டு பயந்த மலான், அந்த ஒற்றுமையைப் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளான். கருப்பு நிறத் தொழிலாளிகள் வெள்ளை நிறத் தொழிலாளிகளுடைய சங்கங்களில் சேரக்கூடாதென்று தடை விதித்தான். பல தொழிற் சங்கத் தலைவர்களை-சாக்ஸ் போன்றவர்களை கம்யூனிஸ்டுகள் என்று பட்டம் சூட்டி, "கம்யூனிஸ ஒழிப்புச் சட்டத்"தின் கீழ், அவர்கள் தொழிற் சங்கங்களின் நிர்வாகப் பதவிகளிலிருந்து ராஜிநாமா செய்ய வேண்டுமென்று உத்திரவு பிறப்பித்தான். ராஜிநாமா செய்ய மறுத்தவர்களுக்கு நூற்றுக் கணக்கான பவுன் அபராதமும் சிறைத் தண்டனையும் விதித்தான்.

இந்திய-ஆப்ரிக்கத் தொழிலாளிகளின் மீது கடும் அடக்குமுறைகளை மலான் பிரயோகித்தான். ஒரு தொழிலாளி ஒரு நாள் தொழிற்சாலைக்கு வேலைக்குப் போகாமல் ஆப்செண்டானாலும் கூட, அது சட்டத்தின் கீழ் குற்றமாக்கப்பட்டு சிறைத் தண்டனை கொடுக்கும் அக்ரமங்களைச் செய்தான்.

இத்தகைய கொடுமைகளை எதிர்த்து, மனிதனை மனிதனாக நடத்த வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், தென் ஆப்ரிக்க காங்கிரஸ், தென் ஆப்ரிக்க இந்தியக் காங்கிரஸ் ஆகிய ஸ்தாபனங்களின் கீழ் டாக்டர் நாயக்கர், டாடு, மொரோக்கா ஆகியவர்களின் தலைமையின் கீழ் தென் ஆப்ரிக்க மக்கள் சத்யாக்கிரஹப் போராட்டத்திலிறங்கினர் தடைகளை மீறினர். கூட்டங்களில் பேசினர். ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களின் மீது கொடிய போலீஸ் அடக்குமுறையை மலான் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறான் சவுக்கடி கொடுப்பது பிரம்படி கொடுப்பது, ஆணிகள் பதிந்த கழிகளைக் கொண்டு அடிப்பது முதலிய சித்ரவதைகளைக் கையாளுகிறான்.

பண்டு தென் ஆப்ரிக்க இந்தியரின் சட்டமறுப்பு இயக்கத்திற்கு காந்திஜீயே தலைமை வகித்து நடத்தியுள்ளார், ஆனால் இன்று தென் ஆப்ரிக்காவில் நடந்து வருவது மலானை எதிர்த்த இந்தியர்களின் போராட்டம் மாத்திரமல்ல. ஆனால் நீக்ரோ மக்களும், வெள்ளைத் தொழிலாளிகளும் அனைவரும் சேர்ந்து நடத்தும் ஒன்றுபட்ட போராட்டமாக உருவெடுத்துள்ளது.

தெ. ஆப்ரிக்க மக்கள் நடத்தும் போராட்டம் ஒரு தனிப்பட்ட போராட்டமல்ல பிரிட்டிஷ், பிரெஞ்சு டச்சு அமெரிக்க ஏகாதிபத்தியங்களை எதிர்த்து காலனி மக்கள் பூராவும் நடத்தும் போராட்டத்தின் ஒரு முக்கியமான பகுதியேயாகும்.

இந்நிலையில் இந்திய காங்கிரஸ் சர்க்கார் தென் ஆப்ரிக்காவிலுள்ள நம் நாட்டவரின் உரிமைகளைப் பாதுகாக்க ஒரு நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை தானே காமன்வெல்த்தில் அங்கத்தினராயிருந்துகொண்டு காமன்வெல்த்தின் இன்னொரு பகுதியில் தன் நாட்டு மக்கள் சித்ரவதை செய்யப்படுவதைக் கண்டு வாளாவிருக்கிறது. தன் கண்டனக் குரலைக்கூட எழுப்பவில்லை சொந்த நாட்டு மக்களின் தன்மானம் பறிக்கப்படுவது கண்டு நேரு கொதித்தெழவில்லை. வாய்மூடி மௌனியாக இருக்கிறார்.

இந்நிலையை நாம் அனுமதித்துக்கொண்டிருக்க முடியாது, பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அங்கத்தினராயிருந்துகொண்டு, பிரிட்டிஷ் தென் ஆப்ரிக்காவில் நடைபெறும் இந்த அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்த, கண்டனக் குரலை எழுப்ப இந்திய சர்க்கார் முன்வரவில்லையென்றால், அது நம்நாட்டு மக்களைக் காட்டிக் கொடுக்கிறது என்றுதான் பொருள். ஏகாதிபத்திய பலிபீடத்திலே நம் மக்களைக் காவு கொடுக்க இணங்குகிறது என்றுதான் அர்த்தம், ஆகவே பிரிட்டிஷ் காமன்வெல்த்தைவிட்டு உடனடியாக இந்தியா விலகவேண்டுமென்று நாம் பலத்த கிளர்ச்சி செய்தாகவேண்டும்.

காமன்வெல்த் உறவு மேலும்மேலும் நம்மை நம் சுயமரியாதையை இழக்கச்செய்யும் உறவு; மேலும் மேலும் நம்மீது வெள்ளை முதலாளிகள், ஏகாதிபத்யவாதிகள் கொடிய சுரண்டல், ஆதிக்கம் செலுத்தும் உறவு.

"நாம் சுதந்திர மடைந்துவிட்டோம்; பூர்ண அரசுரிமை படைத்தவர்கள். சுயேச்சையான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைபிடிக்கிறோம்" என்று நேரு தினந்தோறும் நமக்கு ஞாபகமூட்டுகிறார்.

ஆனால் நடைமுறையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அடங்கி நடக்கும் வெளிநாட்டுக் கொள்கையையே கடைப்பிடிக்கிறார்.

பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இந்தியா இணைந்திருப்பது மலானின் கைகளைத்தான் பலப்படுத்துகிறது. காமன்வெல்த்தைவிட்டு இந்தியா வெளியே வருவதுதான் தென் ஆப்ரிக்க இந்திய மக்களின் போராட்டத்திற்கு மகத்தான சக்தியை யளிக்கும்.

உண்ணாவிரதம் நிறுத்தம்

செஞ்சி, ஆக. 26—

செஞ்சி போர்டு ஆரம்ப உயர்நிலைப் பள்ளியில் உதவி ஆசிரியராக இருந்த தோழர் துளசிரங்கம் அவர்கள் கீழ்க்குறித்துள்ள கோரிக்கைகளைப் பெற 21-8-1952 முதல் உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

1) 4.7-1952ன் உத்திரவுப்படி ஓர் சில ஆசிரியர்களின மாறுதல்கள் ரத்துசெய்யப்படவேண்டியது.

2) செட்டிப்பாளையம் முஸ்லிம் பாடசாலைக்கு மாற்றப்பட்டிருக்கும் என் உத்திரவை ரத்துசெய்யப்படவேண்டியது.

3) செ. போ. ஆ. உயர்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் ப. நாராயண ரெட்டியை மாறுதல் செய்யப்பட வேண்டியது.

4) வருஷம் 10-ம் அதற்கு மேற்கொண்டும் மேற்படி ஸ்கூலில் வேலை செய்து வரும் இசும்பு ஆசிரியர்களை மாறுதல் செய்யப்பட வேண்டியது.

5. 6, 7, 1-2-52 முதல் 31-3-52 வரை ½ சம்பள லீவு 1-4-52 முதல் 1 மாதம் ½ சம்பள லீவு, 1-8-51 முதல் 13-9-51 வரை ½ சம்பள லீவுகளை சேங்ஷன் செய்து தரப்படவேண்டியது.

24-8-52 முடிய 4 நாட்களுக்குப்பின், பொதுஜனக் கிளர்ச்சியால், தெ. ஆ. ஜி. போர்டு நிர்வாகத்தின கவனத்தைத் திருப்பினதால், தென்னாற்காடு ஜில்லா போர்டு கல்வி அதிகாரி அவர்கள் 24-8-1952 மாலை உயர்திரு துளசிரங்கம் அவர்களை நேரில் கண்டு கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்தபின் உண்ணாவிரதத்தை பழரசம் அருந்தி நிறுத்தினார். உடல்நலன் குன்றியிருக்கிறது.

கைதான விவசாயிகளை விடுதலை செய்க!

15 ஆயிரம் மக்கள் இடிமுழக்கம்

நாகை, ஆக. 26—

24-8-52 ஞாயிறு மாலை 6½ மணிக்கு நாகப்பட்டினம் அவுரித் திடலில் தோழர் என. சிவராஜ் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில், கட்சியின சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுமார் 15,000 விவசாயிகளும் பொது மக்களும் திரண்டிருந்தனர்.

நாகை தாலுக்கா மிராசுதார்களில் பலர் 1947 ஒப்பந்தக் கூலியை கொடுக்க மறுப்பதை கண்டித்தும், இது சம்பந்தமான போராட்டத்தில் புதுச்சேரி, மாணலூர் போன்ற இடங்களில் கைது செய்யப்பட்ட விவசாயிகளை விடுதலை செய்வதுடன்; கேசுகளை வாபஸ் வாங்கவேண்டுமென்றும் கோரி கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தோழர் அனந்த நம்பியார் பேசுகையில், பார்லிமெண்டில் ஜனவிரோத போக்குகளை எதிர்த்து எதிர்க்கட்சி போராடியதை விளக்கிப் பேசினார். அவசரச் சட்டத்தை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

முனிசிபல் தொழிலாளர்கள், ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர்கள், கடை சிப்பந்திகள் குறைகளைப் பற்றி பேசியதுடன அவர்கள் ஸ்தாபனங்களில் ஒன்றுபட வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். ஸ்தல முனிசிபல் தேர்தல் நாகை நகர மக்கள் கூட்டு முன்னணிக்கு பூரண ஆதரவளித்து நகராண்மைக்கழகத்தை மக்களுடைய உண்மையான பிரதிநிதிகளைக் கொண்ட ஜனநாயக ஸ்தாபனமாக மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தோழர் எஸ். வடிவேலு எம். எல். ஏயும் பேசினார்.

டாக்டர் இல்லாத ஆஸ்பத்திரி!

அரியலூர், ஆக. 26—

அரியலூர் ஆஸ்பத்திரி 17-8-52 தேதியிலிருந்து இன்று வரை பூட்டப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி டாக்டர் லீவில் போய்விட்டாராம். இவ்வளவு பெரிய ஊரில் சுமார் 10 தினங்களாக டாக்டரே இல்லாததால் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இந்த ஆஸ்பத்திரியில் நடக்கும் ஊழல்கள் கொஞ்சமல்ல. இதற்கு சில பெரிய மனிதர்களும் உடந்தையாக இருக்கிறார்கள். இந்த டாக்டரின் ஊழலை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள் இவரைப் பற்றி பொதுமக்களிடமிருந்து அளவற்ற பெட்டிஷன்கள் சமர்ப்பிக்கப்பட்ட [illegible] அதிகாரிகளுக்கு [illegible] நல்லோ மேலதிகாரிகள் [illegible] வில்லை.

உடனடியாக [illegible] ரின ஊழல்களை [illegible] ரணை செய்து [illegible] றாம் நீக்க வே[illegible] சில பொதுக்கூட்டங்[illegible] மானங்களும் [illegible] இன் எந் [illegible] பட்டுள்ளன.

ரயில்வே இன்ஸ்டிடியூட் தேர்தல்

தெ. இ. ர. லேபர் யூனியன் அபேட்சகர் வெற்றி!

மண்டபம், ஆக. 25—

நேற்று ரயில்வே இன்ஸ்டிட்யூட்டிற்கு புது வருட நிர்வாகஸ்தர் தேர்தல் நடைபெற்றது அங்குள்ள 8 ஸ்தானங்களுக்கும் லேபர் யூனியன சார்பாக 8 பிரதிநிதிகளும ஒர்க்கர்ஸ் யூனியன சார்பாக 6 பிரதிநிதிகளும் போட்டியிட்டதில், லேபர் யூனியன பிரதிநிதிகள இரண்டு பேர் போட்டி இன்றியும், போட்டியிட்ட 6 ஸ்தானங்களுக்கு லேபர் யூனியன சார்பாக, ஐந்து பிரதிநிதிகளும், ஒர்க்கர்ஸ் யூனியன சார்பாக, ஒரு பிரதிநிதியும், கடுமையான போட்டிக்குப் பின் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தோழர்கள் கிருஷ்ண நாயர், ஆர் டர்லி-மெடிகல் தங்கராஜன், சிப்பாய் வாச்சன்வார்டு.

போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்: ஆர். பாலகிருஷ்ணன - லேபரர் - மெரைன, கே. மீனாக்ஷிசுந்தரம்-கிளார்க்-எம். எஸ். ஓ., வி. கே. சந்திரன்-காமமென-இஞ்சினீயரிங், ஏ. முகம்மது கௌஸ் ஷெரிப்-ட்ரைவர்-லோகோ, எம். சீராளன-கிளார்க்-கிரைன ஷாப்.

ஒர்க்கர்ஸ் யூனியன பிரதிநிதி கே. கந்தசாமி, கிளார்க், போர்மென ஆபீஸ், மெரைன.

ராஜபாளையத்தில் காங்கிரஸ்காரர்கள் கொட்டம்!

ராஜபாளையம், ஆக. 24—

ராஜபாளையம் முனிசிபல் தேர்தலுக்கு 22 வது வார்டுக்கு சுயேட்சை அபேட்சகராக திரு. முத்தையா பிள்ளை நிற்கிறார். வேல்ராஜா என்ற காங்கிரஸ்காரர் ஒருவரும் சுயேச்சைப் போர்வையில் நிற்கிறார்.

நெசவுத் தொழிலாளியும், இல்லத்தார் வகுப்பைச் சேர்ந்தவருமான திரு. முத்தையா பிள்ளையை, நெசவுத் தொழிலாளிகள், மில் தொழிலாளர்கள் ஆகிய பாட்டாளிகள் அனைவரும், இல்லத்து சமூகத்தைச்சேர்ந்த 343 ஓட்டர்களும் ஆதரித்துநிற்கின்றனர், இவருக்குத்தான் வெற்றி நிச்சயம் என்று தெரிகிறது.

அதனல் பீதியும், பொருமையும் கொண்ட காங்கிரஸ் கூட்டம் அடிக்க ஆரம்பித்துள்ள கொட்டத்தை சொல்ல நாக்கூசும்.

திரு. முத்தையா பிள்ளைக்கு ரூ. 500 தருவதாக காங்கிரஸ்காரர்களான ராஜாக்கள் பேரம் பேசிப் பார்க்கிறார்கள்; இல்லத்து சமூகத்தாரைக் கூப்பிட்டு மிரட்டி வாய்க்கு வந்தபடி தூஷித்து வருகிறார்கள். ஒன்றும் பலிக்காமற் போகவே ராஜாக்கள் ரைஸ் மில்களில் வேலை பார்த்த இல்லத்தார் சமூகத்தைச் சேர்ந்தவர்களை நீக்கி விட்டார்கள். செங்கல் காளவாயில் வேலை பார்த்த 11 ஆண்களையும், 4 பெண்களையும் நீக்கி விட்டார்கள். சக்கராஜக்கோட்டைக்கு நெல் வாங்கப் போகும் 6 இல்லத்தார் பெண்களை வாய்க்கு வராதபடி தூஷணையாகத் திட்டியுள்ளார்கள்.

இப்படியாக முறைகெட்ட விதமாக, பொதுமக்களை ஆத்திர மூட்டத்தக்க விதத்தில் காங்கிரஸ்காரர்கள் நடந்து வருவது மக்களிடையே அதிருப்தியை வளர்த்து வருகிறது. (ந-நி.)

★

நகரசபைத் தேர்தல்

குடந்தை, ஆக. [illegible]

குடந்தை முனிசிபல் தலுக்காக 32ஸ்தானங்க[illegible] 126 பேர் (காங்கிரஸ், நகர முற்போக்கு கழகம், சுயேச்சை) கட்சியைச் சேர்ந்தவர்கள் நாமினேஷன் போட்டனர். 25-8-52 வரை நாமினேஷன் வாபஸ் பெய்தவர்கள் 38 பேர்கள்.

முதல் வெற்றி

16-வது வார்டில் நகர முற்போக்கு கழக அபேட்சகர் ஆர். பாஷ்யம் நாயுடு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

10-வது வார்டில் சுயேட்சை அபேட்சகர் பி. சுப்பிரமணிய பக்கர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கும்பகோணம் சரித்திலில் சில வார்டுகளில் காங்கிரஸ் போட்டியின்றி தேர்ந்தெடுப்பது உண்டு. இந்த த[illegible] முற்போக்குகழகம் [illegible] ன்மூலம் ஒரு காங்[illegible] சர் கூட பே[illegible] முடியவில்லை. [illegible]

நாடகத்தில் நடித்ததற்கு

பள்ளி ஆசிரியர்களை மாற்ற உத்திரவு

முத்துப்பேட்டை. ஆக. 26—

முத்துப்பேட்டை கழக உயர்நிலைப்பள்ளி நிதிக்காக கடந்த 19-7-52ல் தமிழாசிரியர்கள் சிலரால் இன்றைய உலகம் என்ற ஒரு சீர்திருத்த நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தில் புரட்சிகரமான கருத்துக்கள் இருந்தன என்பதற்காகவும் இந்நாடகத்தில் முத்துப்பேட்டை பள்ளியிலுள்ள தமிழாசிரியர், கு. சச்சிதானந்தம், ஓவிய ஆசிரியர் அருணாசலம் பிள்ளை, ஸ்கூல் ரைட்டர் ஸ்ரீராமுலு ஆகியோர் நடித்தார்கள் என்பதற்காகவும் தஞ்சைஜில்லா போர்டுக்கு முத்துப்பேட்டையிலுள்ள சில காங்கிரஸ்காரர்கள் எழுதிய ஒரு மனுவின் மீது அவர்கள் மூவரையும் வெளியூருக்கு மாற்ற ஜில்லா போர்டாரால் உத்தரவு அனுப்பியுள்ளார்கள்.

இதைக்கேட்ட பள்ளியிலுள்ள மாணவர்கள் சுமார் 600க்கு மேற்பட்டவர்கள் இன்று காலை 11 மணியளவிற்கு பள்ளியை விட்டுவெளியேறி மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தி பந்தடித் திடலில் கூடி தீர்மானம் நிறைவேற்றி ஜில்லா போர்டு தலைவர் வி. நாடிமுத்து பிள்ளைக்குப் தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

மாணவர்கள் பிரதிநிதிகள் ஜில்லா போர்டு பிரசிடெண்டை பேட்டி கண்டு வெளியூர்களுக்கு மாற்றிய ஆசிரியர்களை மறுபடியும் உள்ளூரிலேயே இருக்கச் செய்ய கேட்பது; தலைவர்சம்மதிக்காவிடில் பள்ளிக்குப் போவதில்லை என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். (ந-நி)

ஆரம்ப ஆசிரியர் சம்பள விகிதங்கள்

பம்பாயில் மகாநாடு

பம்பாய், ஆக. 27—

இங்கு நேற்றைய தினம் நடந்த பம்பாய் முனிசிபல் ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாட்டில், பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 75-லிருந்து ஆரம்பித்து ரூ. 240 வரை அளிக்கப்பட வேண்டுமென்றும், பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கு ரூ. 60 லிருந்து ஆரம்பித்து ரூ. 180 வரை அளிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேறியது.

தலைமை யாசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் கூடுதலான படியை ரூ. 25லிருந்து ரூ. 40க்கு உயர்த்த வேண்டுமென்றும் யோசனை கூறப்பட்டது.

இந்த கிரேடுகளை டெம்பரரி ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று மகாநாடு கோரியது.

இன்று இயங்கி வருகிற பல ஆரம்ப ஆசிரியர் சங்கங்களை ஒரே சங்கத்தில் ஐக்கியப்படுத்தி விடுவதென்றும் தொழிற்சங்கசட்டப்படி ரிஜிஸ்டர் செய்துகொள்வதென்றும் மகாநாடு முடிவு செய்தது. சங்கத்தின் சட்ட திட்டங்களை வகுப்பதற்காக 20 பேரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது.

மாணவர் தடியடி பற்றி ஒத்திவைப்புப் பிரேரணை

லக்ஷ்மணபுரி, ஆக. 26—

காசி மாணவர்கள் மீது போலீஸ் தடியடிப் பிரயோகம் நடந்தது பற்றி ஒரு ஒத்திவைப்புப் பிரேரணை, உத்தர பிரதேஷ் சட்ட சபையில் சோஷலிஸ்ட்களால் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதை 31 பேர்கள் மட்டுமே ஆதரித்ததால், குறைந்தது 56 பேராவது ஆதரிக்க வேண்டுமென்ற நியதியால் பிரேரணை தள்ளப்பட்டது.

காசி ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அது பற்றி விசாரணை செய்து வருவதாக உள்நாட்டு மந்திரி சம்பூரணானந்தா கூறினார்.

ராயலசீமா மக்களுக்கு சீன மக்களின் நன்கொடை!

ஆந்திர மாகாண ஐக்ய பஞ்ச நிவாரணக் கமிட்டியின் நன்றி

விஜயவாடா, ஆக. 25—

சித்தூர், கடப்பை, கர்னூல், அனந்தப்பூர் பகுதிகளான ராயலசீமா ஜில்லாக்களிலும், நெல்லூர் குண்டூர் ஜில்லாக்களின் காய்ந்த பகுதிகளிலும் சுமார் 60 லட்சம் மக்கள் கோரப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மாதிரிப் பஞ்சம் 60 வருஷங்களுக்கிடையே கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இதை சென்னை சர்க்கார் ஒப்புக்கொண்டுள்ளதாயினும், அதற்குரிய உதவியளிக்க முன்வரவில்லை.

சகல பகுதி மக்களும் இந்த பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளனர். அதில் மிகப்பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் விவசாயக் கூலிகளும், ஏழை மக்களுமதான். அவர்களுக்கு வேலையுமில்லை. கூலியுமில்லை. [illegible] வாங்க வழியின[illegible]ன்றனர். புளியங்கொ[illegible] தவதாரு இலைகளை [illegible] அவர்கள் தின்று [illegible]மார்கள். செத்த [illegible] மாமிசத்தைப்[illegible] நுகிறார்கள். பசிக்[illegible]மையால் பரித்விக்கும் [illegible]னங்களிடையே, [illegible] நோய்கள் பரவ ஆர[illegible]து விட்டன; ஆயிரக்கணக்கான மக்கள் ஊரைவிட்டு வெளியே[illegible] விட்டார்கள். சமூக வாழ[illegible]வு பாதிக்கப்பட்டு சீர்[illegible]து விட்டது.

ஆந்திர மாகாண[illegible]ய பஞ்ச நிவாரண ம[illegible]யக் கமிட்டிக்கு சகல ஜில்லாக்களிலும் கிளைக்கமிட்டிகள் உள்ளன, இதுவரை 30 ஆயிரம் ரூபாய் ரொக்கமும், 2 ஆ[illegible] மூட்டை நெல்லும் [illegible] வசூல் செய்துள்ளது. [illegible] வச உணவு வி[illegible] 40 இடத்தில் தி[illegible] 20 ஆயிரம் மக்கள[illegible] உணவளிக்கப்பட்டு [illegible]றது. வைத்திய மாணவ[illegible] தோழ[illegible] இரண்டு பிரிவி[illegible] [illegible] பிரதே[illegible] [illegible]டு நல[illegible] [illegible] வேலை [illegible]

4,21,940 நன்கொடை அனுப்பியுள்ளனர்.

நன்கொடையோடு அவர்கள் அனுப்பியுள்ள தந்தியில், "உங்கள் கடிதமும், விபரமும் அறிந்தோம். ஆந்திர மாகாணத்தில் ஏற்பட்டுள்ள கொடிய பஞ்சத்தால் 60 லட்சம் உயிர்கள் தவிக்கின்றன என்று எழுதியுள்ளதைக்கண்டோம். இம்மாதிரி பல பேரழிவுகளை சீன மக்களும் முன்னர் அனுபவித்தோம். அதனல் உங்களது இந்நிலைகண்டு அநுதாபப்படுகிறோம். இந்திய செஞ்சிலுவை சங்கம் மேற்பார்த்து உங்கள் ஸ்தாபனத்திற்குக் கொடுக்கும்படி 200 கோடிசீன மக்கள் நாணயம் (ரூ. 421940) ஆகஸ்ட் 9ல் அனுப்பியுள்ளோம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பணியில் வெற்றிபெறவும் துரதிருஷ்ட வசமாக ஏற்பட்டுள்ள பஞ்சத்திலிருந்து ஆந்திர மக்கள் சீக்கிரமே மீள விரும்புகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இதற்கு பதிலளித்து நன்றி கூறும் முறையில், கமிட்டியின் பொதுக்காரியதரிசி, சீன மக்களையும், சீனாவின் பல்வேறு ஸ்தாபனங்களையும் பாராட்டி, வாழ்த்தி தங்களது அரும் உதவிக்கு நன்றி தெரிவித்து தந்தி கொடுத்துள்ளார். உடனடியாக பஞ்சப் பிரதேசங்களில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு [illegible]ரும் திட்டத்தைத் தயாரித்து வருகின்றனர்.

தென்னேட்டி விஸ்வநாதனின் [illegible]ரீத யோசனை

சென்னை, ஆக 25—

[illegible]லத்தில் அமைக்கப்[illegible] [illegible]கம் தமிழ்நாடு, ஆந்[illegible] [illegible]யங்களுக்கு [illegible] [illegible]ம் பிரதேசத் [illegible] இருமொழி [illegible] [illegible]த்தை [illegible] [illegible]லம் [illegible] [illegible]டி [illegible]ட்டி [illegible]ழங்க [illegible] தென் [illegible] யோசனை [illegible]

கூனூரில் மத்திய சர்க்கார் சிப்பந்திகள் அணி வகுப்பு.

மலைவாழ்வு படி கோரி தீர்மானம்

கூனூர் ஆக 25—

நீலகிரி ஜில்லாவிலேயே என்றும் கண்டிராத பிரம்மாண்டமான தொழில்வர்க்க ஆர்ப்பாட்டம்24-8-52-ல்கூனூரில் நடைபெற்றது. மத்திய சர்க்கார் சிப்பந்திகள் தங்களுடைய மலைப் பிரதேச படிக்காக நடத்திய மாபெரும் அணிவகுப்பு நீலகிரி சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும், எல்லா மத்திய சர்க்கார் சிப்பந்திகளும் தங்கள் கோரிக்கையை விளம்பரப்படுத்தும் பாட்ஜுகளை அணிந்திருந்தார்கள், அதே சமயம் தங்களின் கணவன்மார்கள், சகோதரர்களின் கோரிக்கைகளை ஆதரிக்கும் முறையில் தொழிலாளர் குடும்ப பெண்மணிகளும் பாட்ஜுகளை அணிந்திருந்தார்கள்.

அரவணகாட்டிலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண், பெண், தொழிலாளர்கள் 4 மைல் தூரம் குன்னூருக்கு அணிவகுத்து வந்தது கண்கொள்ளாக் காட்சியாகும்; அவர்கள் கொடுத்த கோஷங்கள் அவர்களின் உள்ளக் குமுறலை மலையுச்சி மீதிருந்து உலகிற்கறிவிப்பதாய் இருந்தது குன்னூரில் மாலை 2 மணிசுமாருக்கு, ரயில்வே, போஸ்டல், முதலிய ஊழியர்கள் அரவண்காட்டு தொழிலாளிகளை வரவேற்றனர்; ஊர்வலம் குன்னூரில பிரதான தெருக்கள் வழியாகச் சென்றுமைதானத்தை அடைந்தது.

பொதுக் கூட்டத்திற்கு தோழர் சவுரி முத்து (ரயில்வே ஆர்கனைசர்) தலைமை வகித்தார். தலைவர் முகவுரைக்குப்பின் நீலகிரி ஜில்லா அச்சுக்கூடத் தொழிலாளர் சங்க காரியதரிசியின் வாழ்த்துச் செய்தி வாசிக்கப்பட்டது. அதன்பின் கார்டைட் பேக்டரி லேபர் யூனியன் உப தலைவர் காரி கவுடரும், சிங்காரமும், தபால் இலாகாவைச் சேர்ந்த திருவாளர்கள் கருப்பண்ண பிள்ளை, கிரிராஜ், ரயில்வே தொழிற் சங்கத்தின் சார்பில் திரு. முத்துசாமியும், தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரசின் கூட்டுக் காரியதரிசியான ப. விருத்தகிரியும், பொன்மலையிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த தோழர் சி. சம்மந்தம் ஆகியவர்களும் மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் மலைப்பிரதேச படியைபற்றி விளக்கி அதைப் பெற சகல சிப்பந்திகளும்ஒன்றுபட்டு நிற்கவேண்டும்என்று எடுத்துக் கூறினர்.

அக்கூட்டத்தில் மலைவாழ்வுபடி கோரிக்கை, பஞ்சப்படியை சம்பளத்தோடு இணைப்பது, மலேயாவுக்கு கூர்க்கத் துருப்புகளை அனுப்ப இந்திய சர்க்கார் உதவுவதை நிறுத்துவது, மாகாண பிரஜைகளான மலைவாழ் மத்திய சர்க்காரின் சிப்பந்திகளின் நியாயத்தை மத்திய சர்க்காரிடம், மாகாண சர்க்கார் வற்புறுத்தக் கோரியும், அரசாங்கம் உத்தேசித்துள்ள, ஒத்திப்போட்டு வருகிற தொழிற்சாலைகளை — முதலாளிகளின் ஒத்துழைப்போடு உடனடியாக ஆரம்பிப்பது சிறு தேயிலை தோட்டங்களில் தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க புதிய மார்க்கெட்டுகளை கண்டுபிடிக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, மத்யசர்க்கார் சிப்பந்திகளும், தொழிலாளர்கள், பொதுஜனங்கள், சுமார் 7 ஆயிரம் பேர் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

★

குன்னூர் நகர மக்கள் கூட்டணி அமைப்பு

குன்னூர், ஆக. 25—

24-8-52ல் வருகிற முனிசிபல் தேர்தலில் இதுவரையிலும் இருந்த ஊழல், லஞ்சம், நிறைந்த முனிசிபல் நிர்வாகத்தை மாற்றவும், காங்கிரஸை முறியடிக்கவும், நகரின் தேவைகளை பூர்த்தி செய்யவும் ஓர் திட்டத்தின் அடிப்படையில் முற்போக்கான அபேட்சகர்களை தேர்ந்தெடுக்கஒரு மக்கள் கூட்டணி அமைக்கப்பட்டது.

முத்துப்பேட்டை பகுதியில் நெல் விலை ஏற்றம்

முத்துப்பேட்டை, ஆக. 25—

நெல் களஞ்சியமான தஞ்சை ஜில்லா முத்துப்பேட்டையைச் சேர்ந்த இந்த பாலையூர் ரேஞ்சில் கண்ட்ரோல் இருக்கும் பொழுது 48 படி கொண்ட மூட்டை போனஸ் உள்பட ரூ. 13-8-0 வாக இருந்தது. கண்ட்ரோல் ரத்தான பிறகு மேற்படி ரேஞ்சில் ரூ. 25 முதல் ரூ. 28-0-0 வரை ஏறிவிட்டது. இந்த விலை எந்த அளவுக்கு உயரப்போகிறது என்று விவசாயத் தொழிலாளர்களும் பொதுமக்களும் அஞ்சுகின்றனர். இம் மாதிரி விலை உயர்வை தடுத்துநிறுத்துவதற்கு ஆச்சாரியார் சர்க்கார், முன் இந்த ரேஞ்சில் எங்கெங்கு உணவு பங்கீடு கடைகள் இருந்தனவோ அந்த கடைகளை உடனடியாகத் திறந்து நியாய விலைப்படி அரிசியும் நெல்லும் கொடுக்க சர்க்கார் முன்வரவேண்டும்.

குறைந்தபட்சம் மேற்கண்ட இடங்களிலாவது நியாய விலை கடைகளை திறக்க அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, கனம் உணவு மந்திரி அவர்கள் ஆவன செய்வார்கள் என்று இந்த ரேஞ்சில் உள்ள மக்கள் எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பு:—1. பாலையூர், 2. திருமக்கோட்டை, 3. பெருகவாழ்ந்தான், 4. சித்தமல்லி, 5. களப்பாள், 6. வடக்கு நாணலூர், 7 தென்பரை.

தற்சமயம் மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் படி அரிசி ரூ 1-7-6 விதம் விற்கப்படுகின்றது. அதுவும் ஜனங்களுக்குத் தாராளமாக கிடைக்கவில்லை.

இம்மாதிரி விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும் நெல் விலையைப் பற்றி இத்தொகுதி எம் எல். ஏ. க்கள் கலெக்டரை பேட்டி கண்டு இந் நிலைமையை விளக்கி கூறி இந்த தாலுக்காவில் நியாயவிலை கடைகள் திறக்க வேண்டுமென்றும் நெல் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் கேட்டதற்கு செய்வதாக கலெக்டர் அவர்கள் வாக்களித்தார்களே ஒழிய எந்த கிராமத்திலும் நியாய விலைக் கடைகள் திறக்கக்கூடவில்லை. இந்நிலை நீடிக்குமேயானால் பட்டினி கிடந்து கஷ்டத்துக்கு உள்ளாகிய விவசாயிகளும், தொழிலாளிகளும் பொதுமக்களும் பட்டினி கிடந்து சாக நேரிடும். இதை உடனடியாக கவனித்து ஆச்சாரியார் மந்திரி சபை ஆவன செய்யும் என்று இந்த ரேஞ்சி பொதுமக்கள் எதிர்நோக்குகின்றனர்.

கார்ப்பரேஷன் ஒர்க்ஷாப் தொழிலாளர் வெற்றி

சென்னை. ஆக. 27—

நேற்று பகல் 12-30 மணிக்கு கார்ப்பரேஷன் ஜெனரல் ஒர்க்ஷாப்பில் உள்ள தொழிலாளர்கள் ஆரம்பித்த உள்ளிருப்பு வேலை நிறுத்தம் முடிவடைந்து இன்று 12-30 மணிக்கு சகல தொழிலாளிகளும் வேலை தொடங்கினர்.

2 மாதம் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்த டர்னர் தோழர் வைத்திலிங்கம் மீண்டும் வேலைக்கெடுத்துக் கொள்ளப்பட்டாலும், நேற்று உள்ளிருப்பு வேலை நிறுத்தத்திற்கு சம்பளம் பிடிக்கப்படவில்லையாததாலும். வெற்றியுடன் தொழிலாளர்கள் வேலையில் முனைந்தனர்.

ஜவுளி கமிஷனர் பொறுப்பு விரிவடைகிறது

புதுடில்லி, ஆக. 26—

இந்திய சர்க்கார் ஜவுளி கமிஷனர் இது வரையிலும் பஞ்சாலை தொழிலின் கண்ட்ரோல், வளர்ச்சியை மட்டும் கவனித்து வந்தார் அவர் இனிமேல் சணல் தொழில் தவிர சகல ஜவுளி தொழிலுக்கும் பொறுப்பு வகிப்பார்.

இம்முடிவை அறிவித்த வியாபார தொழில் இலாகா பத்திரிக்கை குறிப்பு, கூறியுள்ளதாவது:—இம்முடிவின படி கம்பள, சில்க், செயற்கை சில்க், மற்ற ஜவுளி தொழில்கள் இனிமேல் ஜவுளி கமிஷனரின் பொறுப்பின கீழ் வரும்.

புது வரிகளுக்குக் கண்டனம்

அய்யலூர், ஆக 20—

மதுரை, திருச்சி முதலிய ஜில்லாக்களில் நிலங்களிலிருந்து விவசாயிகள் வெளியேற்றப்படுவதைத் தடுக்க சர்க்கார் முன்வர வேண்டுமென்றும், சுபரமணியம் கமிட்டியின் முற்போக்கான சிபார்சுகள் உடனே அமுல் நடத்தப்பட வேண்டுமென்றும் 17-8-5[illegible] நடைபெற்ற வி[illegible] சயல் கமிட்[illegible] தீர்மானிக்[illegible] [illegible] புது [illegible] [illegible]ப்பதற்[illegible] யது.

(முதற்பக்கத் தொடர்ச்சி)

25 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்;

ரூட்போர்ட்டில் 22 பேர் கைது செய்யப்பட்டனர். முதன முறையாக ஒரு பெண்—திருமதி இஸ்மயில் கசாலியா இபக்கத்தில் கலந்து கொண்டார்.

ஜோர்ஸ்டிராப்பில் 41 ஆப்ரிக்கரும் போக்ஸ்பர்கில் 50 பேரும், ஆகமொத்தம் நேற்று வரை 3,198 பேர்களை கைது செய்யப்பட்டனர்.

"தொழில் நீதிமன்றங்கள் கூடவே கூடாது"

கிரியாரின் புத்திமதிகள்

கம்யூனிஸ்டுகள் பலாத்காரவாதிகளாம்!

சென்னை, ஆக. 26—

இந்திய சர்க்காரின் தொழிலாள மந்திரி திரு. வி. வி. கிரி இன்று, தான் தொழில் கோர்டின் முதல் நம்பர் விரோதி என்றும், தன்னுடைய சக்திக்கு உட்பட்டதாயிருந்தால் தொழில் நீதிமன்றங்களை ஒழித்துவிடுவதாகவும் கூறினர்.

யோக்கியமான 10, 12 பேர்களை பொறுக்கி சகல தொழில் தகராறுகளையும் அவர்களைக் கொண்டு பேச்சுவார்த்தையின் மூலமாக தீர்த்துவிட முடியுமென்று கிரியார் கூறினர். இருந்தபோதிலும் தற்சமயத்திற்கு தொழில் நீதிமன்றங்கள் அவசியம் தான் என்று கூறினர்.

ராயப்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் சிம்சன் குரூப் தொழிலாளர்கள், சிப்பந்திகளின் வருடாந்திர விழாவில் பேசுகையில் அவர் அவ்வாறு கூறினர்.

அவர் இரண்டு ஜனநாயக ரயில்வேத் தொழிற சங்கங்களும் ஒன்றுபட வேண்டும் என்றார். அவ்வாறு செய்யப்பட்டால், நாடெங்கிலும் உள்ள ஜனநாயக தொழிற் சங்கங்கள் — ஹிந்த் மஸ்தூர் சபாவாக இருந்தபோதிலும், சரி இ. தே. தொ. ச. காங்கிரசாக (காங்கிரஸ் சங்கம்) இருந்தபோதிலும் சரி—ஒன்றுபடுவது சாத்தியம் என்றார்.

ஒரு கம்யூனிஸ்டு குழுவினர் தன்னை கல்கத்தாவில் சந்தித்ததாகவும், தான் தொழிற் சங்க இயக்கத்தை கம்யூனிஸ்ட் தொழிற்சங்க இயக்கம், கம்யூனிஸ்ட் அல்லாதவர் தொழிற் சங்க இயக்கம் என்று பிளவு படுத்துவதாகக் கூறினர்கள்; ஆனால், தான் கம்யூனிஸ்டுகளும் மற்றவர்கள் கடைப்பிடிக்கும் கொள்கையை கடைபிடித்தால் தகராறு வராதென்று சொன்னதாகவும் கூறினர், மேலும் தான் அவர்கள் (கம்யூனிஸ்டுகள்) சர்வாதிகாரத்திலும், பலாத்காரத்திலும், நாசவேலையிலும் நம்புவதாகவும் மாஸ்கோவிற்கு வால் பிடிப்பதாகவும் கூறினதாகவும் சொன்னர்.

வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசுகையில் தான் சென்னை ராஜ்யத்தின் தொழிலாளர் மந்திரியாக இருந்தபோது 1937ல் மதுரை ஹார்விமில் கம்பெனியார் மிக சிலாக்கியமான விடு கட்டும் திட்டத்தை செய்து முடித்தார்கள் என்று மதுரை வெள்ளை முதாளியைப் புகழ்ந்தார்.

சென்னை முதலமைச்சர் மகாநாட்டிற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில், உங்கள் உடல், மனம், ஆத்மாவை தொடர்ந்து [illegible]ணுங்கள், நினைவில் சுத்தமாகவும் வேலையில், நேர்மையாகவும், கடவுள் நம்பிக்கையுடையவர்களாகவும் இருங்கள். இதுதான் சகல நாடுகளுக்கும், சகல மக்களுக்கும் உள்ள தேசியத் திட்டம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

சிம்சன் குரூப் கம்பெனி முதலாளி திரு. எஸ். அனந்தராம கிருஷ்ணன வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி எவ்வித உத்தரவாதமுமளிக்காமல் வேலையில்லாத் திண்டாட்ட நிதிக்காக ரூ. 5000 அளித்தார். முடிந்தவரை ஆட்குறைப்பு செய்யாமலிருப்பதற்கு முயற்சி செய்வதாகமெழுகினர்.

சிசுக் கொலை

சென்னை, ஆக. 27—

நேற்று இரவு பழைய வண்ணாரப்பேட்டை மிண்ட் சுப்பராயலு நாயுடு தெருவில் ஒரு சிசு கொல்லப்பட்டு சாக்கடையில் கிடந்தது.

பாரதியார் விழா

சென்னை, ஆக. 26—

பாரதியார் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் பின் வருமாறு தெரிவிக்கிறர்.

பாரதி சங்கத்தார் வருடந்தோறும் எட்டையாபுரத்தில் நடத்தி வரும் பாரதி விழாவை இவ்வருஷம் ஜலக் கஷ்டத்தின் காரணமாக சென்னையில் நடத்துவதென தீர்மானித்திருக்கின்றனர்.

வருகிற செப்டம்பர் மாதம் 11, 12ந் தேதிகளில் (வியாழன வெள்ளிக்கிழமைகளில்) சென்னை அரசாங்க நிதிமந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள கோகலே ஹாலில் விழா நடைபெறும்.

மேற்படி விழாவைத் துவக்கி வைக்கும்படி சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறர்.

ஹிம்ளரின் மனைவிக்கு தண்டனை

மியூனிச், ஆக. 24—

ஹிட்லரின் ரகசியப்போலீஸ் படைத் தலைவன ஹிம்ளரின் மனைவிக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதித்து, அவள் சொத்து பூராவையும் பறிமுதல் செய்யும்படி நாஜிஸ ஒழிப்புக் கோர்ட் உத்திரவிட்டது. ஆனல், ஹிம்ளரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன அவளுக்குச் சொந்தமாயிருந்த 11,000 டாலர் பெறுமான எஸ்டேட் பறிமுதல் செய்யப்படவில்லை.

ஆப்ரிக்க தேசியப் பாடலைப் பாடிய 31 ஆப்ரிக்கர்கள் கைது!

ஜொஹனஸ்பர்க், ஆக. 26—

போலீஸ் தலைமைக் காரியாலயத்தை நோக்கி ஆப்பிரிக்க தேசியப் பாடலைப் பாடிக் கொண்டு சென்ற, 6 பெண்கள் உட்பட 31 பேர்களை நேற்றிரவு போலீஸார் கைது செய்தனர்.

நிறவெறி எதிர்ப்பாளர்களாகிய இவர்களை மூன்று பேர் கொண்ட வரிசைகளில் ஊர்வலமாகப் பாடிக் கொண்டே சென்றார்கள். 20 போலீஸார் இவர்களைக் கைது செய்த கொண்டு செல்கையில் அவர்கள் நிறவெறி கோஷங்களை வானதிர முழங்கினர்கள்.

கார்ப்பரேஷன் மின்சார ஓர்க்ஷாப்பிலும் வேலை நிறுத்தம்!

நிர்வாகம் பணியா விட்டால் பொது வேலை நிறுத்தம்?

சென்னை, ஆக. 27—

நேற்று முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்துவரும் கார்ப்பரேஷன் ஜெனரல் ஓர்க்ஷாப் தொழிலாளிகளுக்கு அனுதாபமாக இன்று மின்சாரத் தொழிற்சாலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

இன்று காலை கார்ப்பரேஷன் உதவி கமிஷனர் சங்கரனும், கார்ப்பரேஷன் உதவி மெக்கானிக்கல் எஞ்சினியர் கே. சி. சி. பாலும் மின்சாரத் தொழிலாளிகளை சந்தித்தனர். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளைப் பற்றி சங்கப் பொதுச் செயலாளர் தோழர் பி. கருப்பண்ணனிடம் பேசிக் கொள்ளும்படி கூறினர்.

தோழர் பி. கருப்பண்ணனும், தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ் உதவி தலைவர் தோழர் எ. எஸ். கே. அய்யங்காரும் கார்ப்பரேஷன் அதிகாரிகளிடம் பேசச் சென்றுள்ளனர்.

மின்சாரத் தொழிலாளிகள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைத்துள்ளனர்.

1. ஒப்புக் கொண்டபடி 20 நாள் காஷுவல் லீவு முறையை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.
2. சம்பள வுயர்வு கொடுக்காத சில தொழிலாளிகளுக்கும் கொடுக்க வேண்டும்.
3. இராசுடி பணத்தை ரிடையரான அன்றைய தினமே கொடுப்பதாக 9-8-52 ஒப்புக்கொண்டபடி கொடுத்து விட வேண்டும்.
4. கக்கூசை ரிபேர் செய்ய வேண்டும்.
5. லாரி ஷெட்டுக்கும் ஓர்க்ஷாபிற்கும் இடையே உள்ள சந்தை உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.
6. ரேடியோ வசதி செய்து கொடுக்க வேண்டும்.
7. சகல கார்ப்பரேஷன ஓர்க்ஷாப் தொழிலாளிகளுக்கும் பொது சம்பள உயர்வு 4 அணு கொடுக்க வேண்டும்.

வேலைநிறுத்தத்தை முடிக்க தொழிலாளிகளின் பிரதிநிதிகளுடன் கார்ப்பரேஷன் நிர்வாகிகள் சமரசம் செய்து கொள்ளாவிட்டால், நாளைக்கு 11,000 சகல கார்ப்பரேஷன தொழிலாளிகளும் அனுதாபமாக வேலை நிறுத்தத்தில் இறங்குவர் என்றுதெரிகிறது.

பஞ்ச நிவாரணம் பற்றி ஆராய மகாநாடு

சென்னை, ஆக 25—

சித்தூர், கடப்பா, கர்நூல், தென ஆற்காடு, சேலம், கோயமுத்தூர், நெல்லூர் ஜில்லாக்களில் நிலவும் பற்றாக்குறை நிலைமையை ஆராய பஞ்ச கமிஷனர் திரு. வி. எஸ். ஹெஜ்மாடி தலைமையில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது.

மேற்படி ஜில்லாக்களில் நிவாரண நடவடிக்கைகள் எடுப்பது பற்றி மகாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது.

காசி மாணவர் ஆர்ப்பாட்ட எதிரொலி

காசி, ஆக. 25—

நேற்று நடைபெற்ற மாணவர்-போலீஸ் மோதுதலுக்கு பின்னர், இன்றும் காசி சர்வகலாசாலையும், இதர எல்லா பள்ளிகளும, கல்லூரிகளும் அடைபட்டுக் கிடக்கின்றன.

அக்கிரமம் செய்த போலீஸ்காரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜில்லா மாஜிஸ்டிரேட் மாணவர்களுக்கு வாக்குறுதியளித்தார்.

ரயில்வே தொழிலாளர் பொதுவேலை நிறுத்தம் செய்வர்!

எஸ். குருசாமி எச்சரிக்கை

கல்கத்தா, ஆக. 26—

செப்டம்பர் மாதத்திற்குள் சர்க்கார், தீர்க்கப்படாத ரயில்வேத் தொழிலாளர் குறைகளுக்கு இறுதியான பதிலளிக்காவிட்டால், தொழிலாளிகள் பொதுவேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின பொதுச் செயலாளர் தோழர் எஸ். குருசாமி இன்று எச்சரித்தார்.

ஹௌராவில் இன்று மாலை நடைபெற்ற ரயில்வே தொழிலாளர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தோழர் குருசாமி, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை விரும்பவில்லை. ஆனல் சர்க்கார் அதைத் திணித்தால் தொழிலாளிகள் எவ்வாறு தவிர்க்க முடியும் என்று கூறினர். சர்க்கார் அவர்களுடைய கோரிக்கைகளுக்குக் கொடுக்கும் பதிலைப் பொறுத்திருக்கிறது நாட்டின் மிகப்பெரிய தொழிலான ரயில்வேயில் சமாதானம் நிலவுவது என கூறினர்.

சர்க்கார் தீர்க்கப்படா ரயில்வேத் தொழிலாளிகளின கோரிக்கைகளை [illegible] கவில்லை என்று தோ[illegible] சாமி குறைகூறின[illegible] லாளிகளின பெ[illegible] ஒரு எல்லையுண்டு [illegible] லையை அவர்கள் [illegible] விடுவா[illegible]னர் என [illegible] சரித்தார்.

பாகிஸ்[illegible]ன்று [illegible]

[illegible] பாத்தி[illegible]

அடுத்த [illegible]

[illegible]

காஷ்மீர் [illegible]சுகள் ஆர[illegible]

கிர[illegible]

புதிய [illegible]ள்

ஜி[illegible] 26—

காஷ்மீரை [illegible]ய மாற்றப்பட்ட புதிய [illegible]ணைகள் இன்று இ[illegible] நடைபெற்ற கூ[illegible]த்தில் விவாதிக்கப்பட்டன. பொது ஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு பூர்வாங்கமாக காஷ்மீரை ராணுவ சூனியமாக்கும் பிரச்சினையைப் பற்றி ஐ. நா. ஆதரவில் இரு நாடுகளின மந்திரிகள் [illegible]ய பேச்சுகள் ஆரம்பமாயின.

ராணுவ சூனியமாக்கும் கால கட்டத்தின (முடிவில் யுத்த நிறுத்த [illegible]க்கு இரு மருங்கிலும் [illegible]த்த[illegible]ன படைகள் நிறு[illegible] [illegible]து என்கிற விஷ[illegible] ஐ. நா. வோட்[illegible] [illegible]ஸ்தர் அட் [illegible]ஸ் வேலைப [illegible]ற்கும் தேதி [illegible] பேச்சுகள் நடந் [illegible]கவும் [illegible] ஒரு அறிக்கை [illegible]று [illegible]து.

[illegible]

மேற்கு ஜெர்மனி-இந்தியாவுக்கிடையே புதிய வியாபார ஒப்பந்தம்

புதுடில்லி, ஆக. 26—

இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் மேற்கு ஜெர்மனியிலிருந்து ஒரு வியாபாரத் தூதுகோஷ்டி இந்தியாவுடன் ஒரு புதிய வியாபார ஒப்பந்தம் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக வரவிருக்கிறது.

1952ல் பானில் செய்யப்பட்ட மேற்கு ஜெர்மனி-இந்தியா வியாபார ஒப்பந்தம் 1952 அக்டோபர் 31 உடன முடிவடைகிறது. இதன்படி 33 இந்தியப் பொருள்கள் மீது குறிப்பிடத்தக்க இறக்குமதித் தடைகளை மேற்கு ஜெர்மனி நீக்கியது. இது தவிர, 26 இந்தியப் பொருள்களின் இறக்குமதி கோட்டாவையும் அனுமதித்தது. இந்தக் கோட்டாக்களை அதிகரிப்பது பற்றிய பிரேரணைகளையும் பரிசீலிக்க ஒப்புக் கொண்டது.

ஏனைய ஸ்டர்லிங் நாணய செலாவணி பிரதேசங்களைப் போலவே இந்தியாவும் மேற்கு ஜெர்மனியிலிருந்தும் இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டது. வியாபார ஒப்பந்தத்தில், மேற்கு ஜெர்மனியிலிருந்து தொழில் நுணுக்க உதவி பெறுவதும் இடம் பெற்றிருக்கிறது.

இந்தியாவுக்கும் மே. ஜெர்மனிக்கும் இடையே நடந்த வியாபார விவரம்:—

இறக்குமதி: 1949—50ல் ரூ. 5,82,79,417; 1950—51ல் ரூ. 10,21,06,070; 1951—52ல் ரூ. 28,21,50,159.

ஏற்றுமதி: 1949—50ல் ரூ. 8,95,73,434; 1950—51ல் ரூ. 8,85,94,700; 1951—52ல் ரூ. 8,66,53,078.

மனைவி கணவனிடம் கேட்பதுபோல் உங்களிடம் சர்க்கார் கேட்கிறது

கூனூர், ஆக 26—

தென்னிந்திய ஐக்கிய தோட்ட முதலாளிகள் சங்க வருடாந்திர மகா நாட்டைத் திறந்துவைக்கையில் சென்னை கவர்னர் கணவனிடமிருந்து மனைவி நகைகள் கேட்பது போல சர்க்கார் வரிகள் கேட்கிறதென்றும், மனைவியின் தொந்தரவுகளை கணவன் பொறுத்துக்கொள்வதுபோல் சர்க்கார் போடும் வரிகளை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் திருவாய்மலர்ந்தருளினர்.

"ஒரு வேளை கம்யூனிஸ்டு ஆட்சி நடக்கும் நாடுகளில்மட்டும்தான மக்கள் வரிசெலுத்த வேண்டிய நிலைமை இருக்காது" என்றும் மேலும் கூறினர்.

ஆங்கிலேயர் இந்தியாவிற்குச் செய்துள்ள சேவையை கவர்னர் போற்றி விட்டு திரு. ராஜகோபாலாச்சாரியாரின, ஆட்சியுடன் தோட்ட முதலாளிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறினர்.

ஈரானிய எண்ணெ வயலுக்கு

அமெரிக்க எண்ணெ முதலாளி விஜயம்

டெஹ்ரான், ஆக 26—

ஈரானிய பாசிஸ்ட் 'சும்கா' கட்சியின் தலைவர் டாக்டர் காஆத் முனஷிஜாடேயை போலீஸ் கைது செய்தது. அவருடைய வீட்டில் இருந்த இரண்டு பிஸ்டல்களையும், சில துப்பாக்கி சனியன்களையும் போலீஸ் கைப்பற்றியது.

'சிடி சர்விஸ் கார்ப்பரேஷன்' என்ற அமெரிக்க எண்ணெ கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் வில்லியம் ஜோனஸ் டெஹ்ரானுக்கு வந்துள்ளார். வியாபார நிமித்தம் தான் வரவில்லையென்றும், எண்ணெ வயல்களைச் சுற்றிப் பார்க்க தான் விரும்புவதாகவும் அவர் கூறினர். இன்றும் அவரும் அவருடன் ஐந்து அமெரிக்க எண்ணெ நிபுணர்களும், ஈரானிய எண்ணெ விற்பனைக் கமிஷன் தலைவரும், அபாடான எண்ணெ வயல்களுக்கு புறப்பட்டனர்.

ஈரானிய எண்ணெ வயல்களில் எந்த தனிப்பட்ட அமெரிக்க எண்ணெக் கம்பெனியும் புதிதாக தொழில் செய்ய ஆரம்பிப்பதை அமெரிக்க சர்க்கார் ஆதரிக்கவில்லையென்று அமெரிக்க சர்க்கார் தலைமையதிகாரி இன்று வாஷிங்டனில் அறிவித்தார்.

ஆங்கிலோ ஈரானிய எணணெத் தகராறைத் தீர்க்க பிரிட்டன புது முயற்சிகள் செய்யும் என்று லண்டனில் விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

குண்டுவீசிப் பணிய வைக்க முடியாது

அகில சீன தொழிற்சங்க சம்மேளனம் எச்சரிக்கை

முன்சான், ஆக. 26—

வட கொரிய கம்யூனிஸ்ட பின்னணி பிரதேசத்தில் தொடர்ந்து வெடி குண்டெறிவது யுத்தக் கைதி பரிவர்த்தனைப் பிரச்னையில் முடிவு காண்பதைத் துரிதப்படுத்தாது என்று இன்று பீகிங் ரேடியோமூலம் ஐ. நா. வுக்கு சீன எச்சரிக்கை செய்தது.

அகில சீன தொழிற்சங்க சம்மேளனம் வெளியிட்ட கண்டன அறிக்கையை பீகிங் ரேடியோ ஒலிபரப்புகையில், என்றுமே கண்டிராத அட்டூழியங்களை ஐ. நா. புரிந்து வருவதாகக் குற்றஞ்சாட்டி யுத்தக்கைதி பரிவர்த்தனையை நேர்மையான, நியாயமான அடிப்படையில்தான் தீர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டது.

"ராணுவ நிர்ப்பந்தம், சமாதானமாக இருக்கும் நகரங்கள் மீது முறைகெட்ட குண்டு வீச்சு, சமாதானப் பேச்சுகளை இழுத்தடிப்பது, பலவீனப்படுத்துவது, இதர கேவலமான தந்திரங்கள், அட்டூழியங்கள் அனைத்தும் ஒப்புக் கொள்ளப்படாது" என்று ரேடியோ அறிவித்தது.

★

பள்ளிப் போதனு முறை பெண்கள்படும் அவதி

நாகை, ஆக. 25—

தஞ்சாவூர், தரங்கம்பாடி, திருச்சிற்றம்பலம், திருச்சி இந்த நான்கு ஊரிலும் நடந்து வரும் பெண்கள் உபாத்திமைத் தொழில் பயிலும் ஸ்கூலில் சேர, வருஷக் கணக்கில் மனுச் செய்து வந்தும் இடம் கிடைக்காமல் அநேக பெண்கள் கஷ்டப்படுகிறார்கள். ஒவ்வொரு ஸ்கூலுக்கும் வருஷத்துக்கு 400, 500 பேர் [illegible] வருவதால் 50 [illegible] தான் சேர்க்கப்படுகிறார்[illegible] அதிலும் தஞ்சாவூர் ஸ்கூலில் சேர்க்கப்படும் முறை ஏழைப் பெண்களைப் பெரிதும் பாதிக்கிறது. ஏககாலத்தில் ரூ. 275 வரை சாமானகள் வாங்க ஒரு லிஸ்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த லிஸ்டில் ஒரு சாமான் குறைந்தாலும் அட்மிஷன் கிடையாது. போக்குவரத்து செலவு உள்பட, ஒரு பெண்ணைச் சேர்க்க ரூ. 350 ஆகிறது. [illegible] உபாத்திமை தொழிலுக்கு வரும் பெண்கள் 100க்கு 95 பேர்கள் [illegible] வாழ்க்கையை நடத்தமுடியாத ஏழைகள், அவர்களின அளவு கடந்த கஷ்டத்திற்கிடையில் செலவு செய்து சேர்க்கப்படும் பெண்களையும் தற்காலம் நிர்வகிக்கும் தலைமை உபாத்தி[illegible]யாரம்மாள் ஜெயில் கைதிகள் போல் நடத்துகிறார். இந்த [illegible]த்திற்குப் பயந்து [illegible]மல் வெளியேறிய [illegible]ரும் சிலர் உண்டு. [illegible]த கல்விச்சோலை[illegible] முழுவதும் மாண[illegible] [illegible]நிலைமை [illegible] ஆச்சாரியா[illegible]

கார்ப்பரேஷன் தேர்தல்

50 டிவிஷன்களின் பொதுஸ்தானங்களுக்கு நடைபெறும்!

சென்னை, ஆக 26—

பொதுஸ்தானங்களுக்கு, 50 டிவிஷனகளிலும் சென்னை கார்ப்பரேஷன கவுன்சிலுக்கான தேர்தல் நடக்கவேண்டுமென சென்னை அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

முஸ்லிம்கள், இந்திய கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள். ஆகியோருக்கு ஏழு ஸ்தானங்கள் ஒதுக்குவது அரசியல் சட்டத்திற்கு முரணானது என ஹைகோர்ட் தீர்ப்பை ஒட்டியே இத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. ரிஸர்வ் ஸ்தானங்கள் பின வருமாறு: ஹார்பரிலுள்ள முஸ்லிம்களுக்கு 4 ஸ்தானங்கள், கொத்தவால்சாவடி, புதுக்குப்பம், திருவட்டீஸ்வரனபேட்டை, ராயபுரம் இந்திய கிறிஸ்தவர்களுக்கு 2 ஸ்தானங்கள், பெரியமெட் ஆங்கிலோ-இந்தியர்களுக்கு ஒன்று. இப் பகுதிகளில் பொது ஸ்தாபனங்களுக்கு மட்டுமே அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்.

பொது ஸ்தானங்களுக்கு செப்டம்பர் மாதம் 6, 8 தேதிகளில் அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்.

ரயில்வே தொழிற்சங்க தொழிலாளர், மில் தொழிலாளர் தொழிற் சங்கம், யூனியனல்லாத தொழிலாளர், வடக்கு, யூனியனல்லாத தொழிலாளர் தெறகு, ஆகிய 4 தொழிலாளர் தொகுதிகளின வாக்காளர் ஜாபிதா ஆகஸ்டு 27ல் பிரசுரிக்கப்படும். செப்டம்பர் 6, 7 தேதிகளில் அபேட்சா பத்திரங்கள தாக்கல் செய்யப்படும். செப்டம்பர் 28ல் தேர்தல் நடைபெறும்.

★

தலைநகரில் பட்டினிச் சாவு

சென்னை ஆக. 26—

26-8-52 பழைய ஜெயில் தெரு, (ஸ்டான்லி மருத்துவ விடுதி எதிரில்)

ஒருவார காலமாக பட்டினியால இருந்து 70 வயது கிழவர் மாண்டார். அவரை அடக்கம் செய்ய நாதியற்று கிடந்தது, பிறகு சில ஏழைகள் கூடி பாதசாரியார்களிடம பணம் வசூலித்து பிரேத அடக்கம் செய்தனர். உணவு மந்திரி [illegible] சட்டசபை[illegible]ம் [illegible]ம திருப்தி [illegible]யாக [illegible]னியால் [illegible]ல் என்று [illegible]ம் [illegible]ததற்குள் நக[illegible] [illegible] யூனிஸ்ட் [illegible]வு. இன்னும் [illegible] வளர்ந்து ஆட்சியில் [illegible] [illegible]த்து மடிய [illegible]

திரு. வி. க.வின் தமிழ்த் தொண்டுக்குப் பாராட்டு!

சென்னை, ஆக. 27—

நேற்று மாலை திருவல்லிக்கேணி நடராஜா கல்விக் கழகத்தில் நடந்த திரு. வி. க. 70வது பிறந்த தின விழாக் கூட்டத்தில் தலைமை வகித்த "மடைத் தமிழ்" ஆசிரியர் திரு. டி. எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் அவர்களும், சொற்பொழிவு நிகழ்த்திய தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் மயிலை சிவமுத்து, சென்னை முற்போக்கு தமிழ் எழுத்தாளர் சங்க உபதலைவர் முகவை இராஜமாணிக்கம், திருமதி வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார் ஆகியோரும், தமிழ்ப் பெரியார் திரு. வி.க. தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் சலியாது செய்து வந்த அரும் பெரும் பணிகளை விளக்கிக் கூறி பெண்ணின பெருமை பற்றி எழுதியும் பேசியும் பெண்ணுலகுக்குப் பெருந் தொண்டு செய்த வெற்றியையும் தமிழ்த் தென்றலை தனது அற்புத நூல்களாலும், அரிய உரைகளாலும் தமிழ் நாடெங்கும் வீசச் செய்த அவரது தமிழ்ப் பெருங் காதலையும், அவரது தன்னலங் கருதாத நாட்டுப் பற்றையும், வீழ்ந்து கிடக்கும் மக்களின நல்வாழ்வுக்காக உழைக்கும் அவரது உயர்ந்த மனிதப் பண்பாடு பற்றியும், அவர் கனவு கண்டு வரும் புதிய பொன்னுன தமிழகத்தை நிறுவ சகல தமிழ் மக்களும், கழகங்களும் உழைப்பதே அப் பெரியாருக்குச் செய்யும் கைம்மாறு என்று கூறி அவர் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழ்ப் பணி புரிய வேண்டுமென்றும் வாயார வாழ்த்தினர்கள்.

ரேடியோ பாடகர்களைப் பொறுக்கும் இசைக்குழு

புதுடில்லி, ஆக. 26—

அகிலஇந்திய ரேடியோவில் பாடும் பாடகர்களை நிர்ணயித்து, தரம்பிரித்து பொறுக்குவதற்காக ஒரு இசைக்குழுவை நிர்ணயிப்பதென்றும், அதிலுள்ள 2, 3 மெம்பர்கள் ஜூரர்களாயிருந்து இசைக்கலைஞர்களைப் பொறுக்குவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக இந்திய சர்க்கார் தகவல் இலாகாவின அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்துஸ்தானி சங்கீதத்திற்கு வடபகுதியென்றும் கர்நாடக சங்கீதத்திற்கு தென் பகுதியென்றும் இரு பகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. ராம்பூர் நவாப் இதன் தலைவராயிருப்பார்.

வட பகுதி:—பண்டிட் எஸ். என். ரதனஜங்கர் (உபதலைவர்) பிரேந்திரகிஷோர் ராய் சௌதுரி, பண்டிட் ஆர். என. ஹக்சார், வி. என். பட்வர்த்தன், என். பத்மநாப சாஸ்திரி, பாபுலால் குப்தா, தாகூர் ஜயதேவ சிங் (மெம்பர்கள்)

தென் பகுதி:—ஜஸ்டிஸ் டி. எல். வெங்கட்ராம அய்யர் (உபதலைவர்); டி. வி. சுப்பராவ், செம்மங்குடி ஆர். சீனிவாச அய்யர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, முசிரி சுப்பிரமண்ய அய்யர், பேராசிரியர் துவாரம் வெங்கடசாமி நாயுடு (மெம்பர்கள்).

ஒப்பந்தக் கூலி கேட்டதற்கு உதை, கத்திக் குத்து

வாட்டார், ஆக. 25—

இக் கிராமத்தில் பண்ணை வேலை செய்யும் கூத்தன், பிச்சன் என்ற இருவர், ஒப்பந்தக் கூலி கேட்டதற்காக அண்ணாமலைப் பிள்ளை, கல்யாண சுந்தரம் பிள்ளை என்ற மிராசுதார்களால் அடித்து துன்புறுத்தப் பட்டார்களாம். கத்தியால் கையில் குத்தப்பட்டார்களாம் இவர்களுக்கு வேலை தரமுடியாதென்று மறுத்ததோடு, வேறு யாரும் இவர்களை வேலைக்குக் கூப்பிடக் கூடாதென பயமுறுத்துகிறார்களாம்.

வேலையின்றித் தவிக்கும் இந்த இரு விவசாயத் தொழிலாளர்களும் கபிஸ்தலம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று இந்த அக்கிரமத்தை ரிப்போர்ட் செய்தார்களாம். ஆனல் போலீஸ் அதிகாரி ஒருவர் இவர்களை மிரட்டி விரட்டிவிட்டாராம்.

மேற்கூறிய மிராசுதார்களில் ஒருவரான கல்யாண சுந்தரம்பிள்ளை என்பவர், சென்ற பொதுத் தேர்தலில் குன்னியூர் அய்யருக்கு போலிங் ஏஜண்டாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

★

இந்திய வாலிபால் கோஷ்டியின்வெற்றி

லண்டன், ஆக. 26—

மாஸ்கோவில் நடக்கும் உலக வாலிபால் பந்தயத்தில் இன்று பின்லாந்தை இந்திய வாலிபால் கோஷ்டியினர் (ஆண்கள்) தோற்கடித்தனர். (15—4, 15—1, 15—4) என்று மாஸ்கோ ரேடியோ அறிவித்தது.

மக்கள் மன்றம்

போலீஸ் தடபுடல்!

தோழரே,

24-8-52ல் தங்கவயல் கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் கூர்க்கப்படைத்திரட்டும் ஸ்தலங்களை உடனடி மூடிவிட இந்திய சர்க்கார் உத்திரவிட்டாக வேண்டும் என்ற இந்திய கம்யூனிஸ்டு கட்சி அறைகூவலை ஏற்று, ராபர்ட்சன் பேட்டையிலே பொதுக் கூட்டம் நடத்த போலீஸ் சூபரண்டை அனுமதி கேட்டிருந்தோம்; அனுமதிகோர நேரிலேயே தோழர் எஸ். சவரிதாஸ், கட்சிக் காரியதரிசி தோழர் வி. எம். கோவிந்தன் கையொப்பமிட்ட மனுவைக் கொண்டு சென்றிருந்தபோது பதிலை அனுப்புகிறோம் எனக் கூறிவிட்டு, இடையிலே ராபர்ட்சனபேட்டையிலே யுள்ள காலியிடத்திற்கு சொந்தக்காரரான ஸ்ரீ அஸ்வத்நாராயண செட்டியிடம் போலீஸை அனுப்பி, கம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டத்திற்கு இடம் கொடுக்க வேணடாம் என மிரட்டி வந்துவிட்டு மறுநாள் கம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டத்திற்கு இடம் கொடுக்க முடியாதென இடத்திற்கு சொந்தக்காரர் கூறிவிட்டார். ஆகவே உங்களுடைய அனுமதி மறுக்கப்பட்டது, என்று போலீஸ் சூப்பிரண்டு பதில் அனுப்பிவிட்டார்.

பிரிட்டிஷ்காரர்களின் ஏகபோக கொள்ளைச் சுரண்டலின் "தென் ஆப்ரிக்க காலனி" யாகிய தங்கவயலில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராக, கூர்க்கப்படை திரட்டும் அவர்களின யுத்தவெறிக்கெதிராக தங்கவயல் தொழிலாளர் பொதுமக்கள்—வியாபாரிகளை ஒன்றுதிரட்ட வெள்ளையர்களின் தாசானுதாசர்களாய் சேவகம் செய்யும் இந்தப் போலீஸ் சூப்ரண்டிற்கு, கம்யூனிஸ்டுக் கட்சி கூட்டத்திற்கு எப்படி அனுமதி கொடுக்க முடியும், அடிமை சேவையே தெய்வப்பணி யென்றுள்ள இந்திய சுதந்திர உணர்வும், தாய்நாட்டின் கௌரவத்தைப் பாதுகாக்கும் பணி தன அடிமை சேவைக்கு உலை வைக்கும் என்பதை உணர்ந்துள்ள இந்த ஜனமங்களுக்கு இதைவிட வேறு என்ன தான் செய்ய முடியும்.

45, போலீஸ் ஆக்டின் கீழ் தங்கவயலில் பொதுக்கூட்டங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கெதிராக, தங்கவயல் மக்களையும், ஸ்தாபனங்களையும் ஒன்றுதிரட்டிப் போராடும் பணியை வெற்றியடையச் செய்ய தங்கவயல கம்யூனிஸ்டுக் கட்சி, தங்கவயல் தொழிற்சங்கங்கள் மக்கள் ஸ்தாபனங்களை அறைகூவியழைக்கிறது.

எஸ். சவரிதாஸ்
ஆண்டர்சன்பேட்டை
23-8-52

★

அநியாயம்!

ஐயா,

தஞ்சை ஜில்லா கும்பகோணத்தை அடுத்த 'கொரநாட்டுக்கருப்பூர்' என்ற சுந்தரேஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தில் 1948-1949ம் வருஷங்களில் சமையல் வேலை பார்த்து வந்தேன்.

தஞ்சையில், அஸிஸ்டெண்ட் கமிஷனராக இருந்த சுப்பிரமணிய ஐயர், மேற்படி தேவஸ்தானத்தில் எக்ஸிகூடிவ் ஆபீஸராக இருந்த தம்புசாமி மூப்பனார் பேரில், சில சார்ஜ்கள் ஏற்படுத்தி போர்டு பிரஸிடெண்டுக்கு ரிப்போர்ட் செய்தார். அதனால் "ஸஸ்பெண்டு" செய்யப்பட்டார்.

அஸிஸ்டெண்ட் கமிஷனரின் ரிப்போர்ட்டின் மீது ஹெட் ஆபீஸ் இனஸ்பெக்டர் விசாரணை செய்து, கோவில் சிப்பந்திகள் சிலரிடம் ஸ்டேட்மெண்டு வாங்கினர்.

போர்டு பிரஸிடெண்டின் சம்மனின் பிரகாரம் 18-9-49ல் தஞ்சைக்கு ஆஜராகியிருந்தேன்.

தான் தப்பிப்பதற்காக "ஸஸ்பெண்ட்" செய்யப்பட்ட எக்ஸிகூடிவ் ஆபீஸர், என மீது சில அபாண்டமான வார்த்தைகளை போர்டு பிரசிடெண்டிடம் தெரிவித்தார். அதாவது அஸிஸ்டெண்ட் கமிஷனர் ரிப்போர்ட் செய்ததற்கு நான் முக்கிய காரணஸ்தர் என்றும் மற்றும் சில உண்மையற்ற விஷயங்களை தெரிவித்தார்.

போர்டு பிரஸிடெண்ட், சின்னய்யா பிள்ளைக்கு தம்புசாமி மூப்பனார் வலதுகரம் போன்றவர். சின்னய்யா பிள்ளை சேலத்தில் "பப்ளிக் பிராஸிகூடர்" ஆக இருந்த காலத்தில் தம்புசாமி மூப்பனார் சேலத்திலே "ஸ்கூல் டீச்சராக" இருந்திருக்கிறார். இருவரும் இணைபிரியா சிநேகபான்மை கொண்டவர்களாதலால், தம்புசாமி மூப்பனார் விசிய வலையில் சிக்கி என்மீது கடுங்கோபம்கொண்டு, அளவுக்கு மீறிய வார்த்தைகளை உபயோகித்தது மன்னியில், ரங்கராஜன் என்ற எக்ஸிகூடிவ் ஆபீஸரைக் கூப்பிட்டு ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து, வேலையிலிருந்து நிறுத்து என்று சொனனதுமன்னியில், எக்ஸிகூடிவ் ஆபீஸர்கள் டிரஸ்டிகள் இதர பொதுஜனங்களுக்கு மத்தியில்,

"அட கிரஹசாரமே, நீ வக்கீல் குமாஸ்தாவாக இருந்துவிட்டு; சமையல் தொழில் ரொம்பவும் கவுரதை என்று சமையல் வேலைக்கு வந்தீரோ" என்று எனது தொழிலை இழிவுபடுத்கினர். போர்டு பிரஸிடெண்ட் சொன்னதினல், ரங்கராஜன் என்ற எக்சிகூடிவ் ஆபீஸர், எனக்கு ஒரு மாத நோட்டீசுடன என்னை ஸர்விசிலிருந்து டெர்மினெட் செய்திருக்கிறர்.

டி. எம். சின்னய்யா பிள்ளையின செய்கையால், தாங்கொணுத நஷ்டமும், மனக்கிலேசமும், பொருள் நஷ்டமும் ஏற்பட்டிருப்பதுடன், சதா சர்வகாலமும், பசியுடன் போராடும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது.

டி. எம். சின்னய்யா பிள்ளையை, உடனே டிஸ்மிஸ் செய்து கஷ்டநஷ்டங்களுக்குத் தகுந்த நிவாரணம் அளிக்குமாறு கவர்னமெண்டைக் கேட்டுக் கொள்கிறேன்.

வி. வெங்கட்ராம ஐயர்
19-8-52

கிராமத்தை அழிக்க உத்தரவு

டெம்ப்ளரின் கொலைபாதகச் செயல்!

சிங்கப்பூர், ஆக 25—

பெர்மாடாங் டிங்கி என்ற மலேயா கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கம்யூனிஸ்ட் தலைவர்களைக் காட்டிக்கொடுக்க மறுத்ததால், அந்த கிராமம் முழுவதையுமே அழித்துவிடும்படி மலேயக் கொலை வெறியன் டெம்ப்ளர் உத்தரவிட்டுள்ளான்.

போலீசும், ராணுவமும் அந்தக் கிராமத்திலிருந்த அத்தனை மக்களையும் அடித்து லாரிகளில் ஏற்றி சித்ரவதை முகாம்களுக்குக் கொண்டு போயினா. நாடு கடத்தப்பட்ட 66 கிராம வாசிகளில் பலர் குழந்தைகள். பலத்த போலீஸ் ராணுவ பந்தோபஸ்துடன இந்த லாரிகள் [illegible]கொண்டு சென்றன. 13 பேர்களே அந்த கிராமத்தில் மீதமுள்ள மக்கள்.

அந்த கிராமத்தை நாசம் செய்வதற்கு முன அங்குள்ள சினஹெங் தோட்ட முதலாளியைச் சேர்ந்த 19 கட்டிடங்களை வேறிடத்திற்கு அப்புறப்படுத்தும்படி கூறியுள்ளான டெம்ப்ளர்.

ஜோஹோர் மாகாணத்தில் 4 நாள் சுற்றுப் பிரயாணத்திலிறங்கியுள்ள டெம்பளர் "எல்லா கிராமங்களிலுள்ள மக்களுக்கும் கம்யூனிஸ்ட்களைப் பற்றித் தகவல் தெரியும். ஆனல் பயப்பட்டுக் கொண்டு, அவர்கள் சர்க்காரிடம் தகவல் சொல்ல மறுக்கிறார்கள். சர்க்காருக்கு உதவி செய்யுங்கள்; சர்க்கார் உங்களுக்கு உதவி செய்யும்" என்றான.

மக்களுக்கு இன்னும் [illegible]திக பாதுகாப்பளிப்ப[illegible] [illegible]ரா மங்களைச் சுற்றி[illegible] [illegible]பி வேலி போட்டு[illegible] போவதா[illegible] [illegible]தில் விளக்[illegible] வும், [illegible]அ[illegible] அதி[illegible] தார்[illegible]

[illegible]து.

"மாயூரம் நகர சபைத் தேர்தல் 8 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டனர்"

மாயவரம், ஆக. 25—

28 வார்டுகளுக்கு 91 பேர் அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. ஏற்கனவே அனேகரும் அதிகமானது. இன்று வாபஸ் வாங்குவதற்கு கடைசி நாளாகையால் இது வரை 28 பேர் வாபஸ் பெற்றனர். 8 பேர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். எனவே மீதியுள்ள 20 வார்டுகளுக்குத்தான் இனி தேர்தல் நடைபெற வேண்டும்.

நேற்று (25-8-52) மாயவரம் நகர மக்கள், கூட்டணியின் சார்பாக மாயவரம் நகர்ப் பூங்காவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டணியின் தலைவர் திரு. கே. ஆர். சம்மந்தம் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். தலைமையுரையில் பேசும்பொழுது "இதுவரை முனிசிபாலிடியில் காங்கிரஸ்காரர்களும் இதர சுரண்டல்காரர்களும்தான் ஆதிக்கம் செலுத்திவந்தனர். அதை முறியடித்து முற்போக்காளர்களை நாம் கொண்டுவந்தாக வேண்டும். நாங்கள் எப்படி சட்டசபையில் காங்கிரஸை எதிர்த்து கூட்டணி அமைத்துபோராடுகிறோமோ அதேபோல்தான் இங்கேயும் செய்யவேண்டும்" என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில் கூட்டணி அபேட்சகர்களையே ஆதரிக்க வேண்டும் என்று கூட்டணி அபேட்சகர்களின் ஜாபிதா ஒன்றை வாசித்தார்.

பின்னர் கூட்டணி காரியதரிசி தோழர் எம். காத்தமுத்து கூட்டணி திட்டத்தை விளக்கினர். "இந்நகரில் 270 செக்ஷன் அமுலிலிருக்கிறது. அது மிகக் கொடுமையானது. அது எடுக்கப்பட வேண்டும்" என்றார். பின்னர் மேலும் பேசுகையில் "சர்க்காரில் இதர எல்லா தொழிலாளர்களுக்கும் இருக்கிற சாதாரண உரிமையான" சங்கம் கட்டும் உரிமை முனிசிபல் சிப்பந்திகளுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டும். வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும்" என்றும் மற்றும் இதர திட்டங்களையும் விளக்கிப் பேசினர்.

தோழர்கள் வை. மாணிக்கம், ஆர். பழனிசாமியும் பேசினர்கள. கூட்டத்திற்கு சுமார் 2000-க்கு மேற்பட்டவர்கள் வந்திருந்தார்கள்.

கோயில்பட்டி நியாயவிலைக்கடைகளில் அரிசி இல்லை!

எட்டயாபுரம், ஆக. 25—

கோயில்பட்டி தாலுகாவில் உள்ள நியாய விலைக் கடைகளில் அரிசி கிடைப்பதில்லை.

இதன் விளைவாக அரிசிவிலை 40% ஏறிவிட்டது. அரிசி முனபுபட்டணம் படி ரூபாய் 0-15-0க்கு விற்றது இப்போது ரூ. 1-5-0 விற்கிறது.

விலையேற்றத்திற்கு, வியாபாரிகள் வெளியிடங்களுக்கு அனுப்புவதற்காக அதிகமாக வாங்குவதும் ஒருகாரணமாம்.

கம்பு, சோளம் போன்ற தானியங்களின் விலையும் ஏறிவிட்டது.

தபால் கார்டு விலையைக் குறைக்க முடியாது

—ஜகஜீவன்ராம்.

சென்னை, ஆக. 26—

இந்தியாவின் போக்குவரத்து மந்திரி திரு. ஜகஜீவனராம் தென்னிந்திய வர்த்தக சங்கத்தில் பேசும்பொழுது, ஒவ்வொரு போஸ்டு கார்டினாலும் இந்திய சர்க்காருக்கு நான்கு தம்பிடி நஷ்டமென்றும், இதனால் ஒரு கோடிரூபாய் சர்க்கார் இழந்துவிட்டதென்றும் எனவே இனிமேல் கார்டின் விலையைக் குறைக்க முடியாதென்றும் கூறினார்.

இரண்டணா கவர், இன்லண்ட் லெட்டர் (உள்நாட்டுக் கடிதம்) தவிர பாக்கி எல்லாவற்றிலும் சர்க்காருக்கு முன் கிடைத்த வருமானமில்லை என்று கூறினர்.

தி. மு. க. விலிருந்து ராஜினாமா

பழனி, ஆக 18—

இந்நகர் தி. மு. கழக ஊழியர் பா. கோவிந்தராஜு—டி கழகத்திலிருந்து விலகிக்கொண்டதாக அறிவிக்கிறார்.

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodhaya Buildings 38, Mount Rd, Madras 6.

நீர்ப்பாசனமில்லாத நிலங்களுக்கு வரி வசூலிக்காதே

பசுவின் மடியை அறுத்துப் பால்குடிப்பதா?

ராமநாதபுரம் விவசாயிகள் மகாநாட்டில் சொக்கலிங்கம்பிள்ளை, ஆதித்தன் முழக்கம்

ராமநாதபுரம், ஆக. 24—

ராமநாதபுரம் தாலுகா விவசாயிகளின் முதல் மகாநாடு நேற்று இந்நகர் பொன்னு டாக்கிஸில் பாப்பாகுளம் சொக்கலிங்கம் பிள்ளை எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்றது.

தோழர் ஆர். எச். நாதன் விவசாய சங்க கொடியேற்றுவித்துப் பேசுகையில், சிர்குலைவு வாதிகளும், பிற்போக்குக் காங்கிரஸ்காரர்களும், நிலச்சுவான்தார்களின் கையாட்களும் விவசாயிகளின் ஒற்றுமையைக் குலைப்பதற்காகக் கம்யூனிஸ்ட் பூச்சாண்டி காட்டுகிறார்களென்றும், விவசாய சங்கம் கட்சிப் பற்றற்றதென்றும், விவசாயி தொழிலாளி ஒற்றுமையைக் குறிக்கும் சர்வதேசியச் செங்கொடியை பிற்போக்காளர்கள் அனர்த்தம் செய்து, பலாத்காரப் பூச்சாண்டி காட்டி விவசாயிகளை ஒன்று சேர விடாமல் பயமுறுத்துகிறார்களென்றும், ஆனால் விவசாயிகள் இதற்குச் செவி சாய்க்காமல் ஸ்தாபன ரீதியாக ஒன்று திரண்டு தங்கள் முன்னேற்றத்திற்காகப் போராட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தோழர்கள் பி. சீனிவாசராவ், மணலி கந்தசாமி, இ. எம். எஸ். நம்பூத்ரிபாத், முகவை ராஜமாணிக்கம் ஆகியோர்களிடமிருந்து வந்த வாழ்த்துச்செய்திகளை தோழர் கே. எம். சுந்தரம் வாசித்தார். வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு. ஏ. வி. முத்திருளாண்டி சேர்வை வரவேற்புரையை வாசித்தளித்தார்.

ஜில்லா விவசாயிகள் சங்கக் காரியதரிசி தோழர் ஆதிமூலம் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் ராமநாதபுரம் தாலுகா பரம்பரையாக நீர்ப்பாசன வசதியற்றுப் பஞ்சப் பிரதேசமாய் கிடக்கிறதென்றும் இது பற்றி எடுத்துரைக்க சட்டசபையில் நாதி இல்லையென்றும், ராமநாதபுரம் ராஜா மந்திரியாக விற்றிருந்தும் பேசாமடைந்தையாக இருக்கிறாரென்றும், விவசாயிகள் கூலிகளாகவும், அகதிகளாவும் குடிபெயர்ந்து போய்க்கொண்டிருக்கிறார்களென்றும், வியாபார மந்தம், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகளுக்கு விவசாயிகள் சுபிட்சமடையாதது தான காரணமென்றும், விவசாயி சுபிட்சமடைய வேண்டுமென்றால் நீர்ப்பாசன வசதிசெய்து கொடுத்து கடன சுமையைக் குறைக்க வேண்டுமென்றும், இவற்றைப் பெறுவதற்கு விவசாயிகள் அனைவரும் ஒரே அணியில் திரண்டாக வேண்டுமென்றும் கூறினர்.

விவசாயிகளின் நண்பன்

நான் விவசாயிகளின் நண்பன், உங்கள் குறைகளைப்பற்றி இங்கு வந்து விசாரித்துத் தெரிந்துகொண்டேன். ஜமீன்தாரால் வரி விதிக்கப்படாத மணல்காட்டிற்குக் கூட காங்கிரஸ் சர்க்கார் வரி விதித்திருக்கிறதைக் கேட்டு ஆச்சரியப்படுகிறேன். [illegible] கிராமங்களில் விதிக்கப்படும் வரியையும் பார்த்தால் பகல் கொள்ளையாகவே தோன்றுகிறது. மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு அத்தியாவசியம். உணவை உற்பத்தி செய்ய நீர்ப்பாசனம் அத்தியாவசியம். இப் பகுதியில் அந்த வசதியே செய்யப்படவில்லை. இன்று பிற்போக்குத் தனமாயும் பெரும் பகுதி மக்களின் நலத்துக்கு விரோதமாகவும் சர்க்கார் நடத்தப்படுகிறது. இது என்னுடைய அரசியல் அனுபவத்தை வைத்துமட்டுமல்லாமல் சட்ட சபை அனுபவத்தை வைத்தும் கூறுகிறேன். வெள்ளைக்காரன் ஆண்ட காலத்தை விட இன்று விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், வேலைப்பளு ஆகியவற்றால் மக்கள் அவதிப்படுகிறார்கள். கைத்தறி நெசவுத் தொழிலாளர் கிழங்கு, தழைகளைத் தின்கின்றனர். வியாபாரத்திலும் பெரிய அளவில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. மக்களிடத்தில் பண்டங்கள் வாங்க வக்கில்லை. வருமானம் வரும் வழி அடைபட்டு கொண்டே வருகிறது. சர்க்கார் குமாஸ்தாக்களுக்கும் போலீசுக்கும் வாழ்க்கை வசதிக்குப் போதிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. சங்கங்கள் வைத்துக் கொள்ள உரிமையில்லை. தொழிலாளி, விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு எந்தமுயற்சியும் செய்யப்படவில்லை. மில் முதலாளிகளுக்கும், நில முதலாளிகளுக்கும் சாதகமாகவே சட்டங்கள் வகுக்கட்பட்டு சர்க்கார் நடத்தப்படுகிறது. கண்ட்ரோல் நீக்கத்தின் மர்மம் நிலப்பிரபுக்களுக்கும் கொள்ளைலாப வியாபாரிகளுக்கும் லாபம் ஏற்படத்தானே தவிர வேறில்லை. நில முதலாளிகளோ, பெரும் முதலாளிகளோ எங்கேயாவதுவரி எதிர்ப்புச் செய்திருக்கிறார்களா? அவர்களையெல்லாம் வரி விதிக்கு முன்பே கூட்டி புதிய வரி விதிப்பினால் உங்களுக்கு ஒன்றும் நஷ்டமில்லை என்று பிரதமர் விளக்கிக்கூறிவிட்டார்.

உண்மையான பட்ஜெட் எப்படி இருக்க வேண்டும். [illegible] மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வகை செய்யப்பட வேண்டும். நில வரி, தண்ணீர் வரி என்று வசூலிக்கும்போது தண்ணீர் வசதியை செய்து கொடுக்கப்படுவதில்லை? செஸ் என்ற பெயரால் ரஸ்தா வசதிக்காகவும், கல்விக்காகவும், கிராம சுகாதாரத்திற்காகவும், ரூபாயிக்கு ஐந்தணாவாக வசூலிக்கப்படுகிறது. இன்று கிராமங்களில் கல்வி, ரஸ்தா, குடி தண்ணீர் வசதிகள் ஏதாவது உண்டா. சுமார் 10 ஆயிரம் ரூபாய் வரி வசூலாகும் ஒரு கிராமத்தில் சுமார் 3 ஆயிரம் ரூபாய் செஸ் வசூலாகிறது. வருஷந்தோறும் ஒரு கிராமத்தின முன்னேற்றத்திற்காக 3 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டால் அக்கிராமம் இன்றுவரை சோலைவனமாக மாறியிருக்காதா? அப்படி இல்லாத போது எங்கே அந்தப் பணமெல்லாம்? கவர்னருக்கும், மந்திரிகளுக்கும், உயர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளமாகவும் அலவன்ஸாகவும் போகிறது.

நம் மாகாணத்தில் 43 லட்சம் பேர்கள்தான் படிக்கிறார்கள். இன்னும் 75 லட்சம் பேர் படிக்க இடமில்லை. 42 லட்சம் பேர்களிலும் 3-ல் ஒன்றுதான 4, 5 வகுப்புக்கள் வரை படிக்கிறார்கள் மீதி இரண்டு பங்குப் பேர்கள் படிக்கமுடியவில்லை. மற்றவர்களுக்குப் பொருளாதார வசதியில்லை, உணவு, உடை, வாழ்க்கைத்தரம் வசதி ஏற்பட்டால் தானே படிக்க முடியும்?

வருமானத்தின் மீது வரி போடு

வரி விதிப்பு முறையில் நிலத்தின் விஸ்தீரணத்திற்குத் தக்க வரி விதிக்கக் கூடாது. நில வருமானத்திற்குத் தக்க வரி விதிக்க வேண்டும். மிகச் சிறு நிலக்காரர்களுக்கு வரி விதிக்கக் கூடாது. சர்க்கார் என்றால் எல்லா பொறுப்புகளையும் வகிக்க வேண்டும். மக்கள சமுதாயத்தில் பாரபட்சமற்ற முறையில் வரிப் போடவேணடும். 1,70,000 ஏக்கர் தேயிலைத் தோட்ட மிருக்கிறது. ஏக்கருக்கு ரூ. 1 முதல் 2½ வரை தீர்வை. ஆனால் வருமானம் ரூ, 2 ஆயிரம் முதல் 2,500 வரை. நிலத்திற்கு ரூ. 15 முதல் 22 வரை தீர்வை. ஆனால் வருமானம் ரூ. 200 முதல் 250 வரை. ஆகையால தேயிலைத் தோட்டங்களுக்கு சரியான வரிப் போட்டால் சுமார் 4 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரும். உபரி வரிகள் போடவேண்டிய அவசியமிராது. நிலமில்லாத விவசாயிகளுக்குத் தரிசு நிலங்களை வழங்குவதன மூலம் உணவு உற்பத்திப் பெருகும். ரேஷனும் கண்ட்ரோலும் வேண்டியதில்லை.

நாட்டில் நடக்கும் குழப்பத்திற்குக காரணம் விவசாயியும் தொழிலாளியுமல்ல. நிலமுதலாள்யும் பெரு முதலாளியும் தான்; சர்க்கார் உணமையிலேயே விவசாயி, தொழிலாளிக்கு நனமை செய்தால் சர்க்காரை ஆதரிக்காமல் என்ன செய்ய முடியும். போலீசுக்குச் செலவிடும் 7 கோடியில் 5 கோடியை குறைக்கலாமே மக்களுக்கு விரோதமாயிருக்கும் மந்திரி சபை மேல்தட்டிலிருக்கும் மக்களுக்குநனமைசெய்யும் போலீசை வைத்து அதிகாரம் செலுத்தினால் அது மக்கள் சர்க்கார அல்லவென்று கூறினால் அது குற்றமா? நமது மாகாணத்தில் விவசாயச் செலவுக்கு வேண்டிய பணம் 600 கோடி ரூபாய். இதில் 12 கோடிதான சர்க்கார் கடனுகக் கொடுக்கிறது. பாக்கியெல்லாம் [illegible] லேவாதேவிக்காரர்களிடம் [illegible] வாங்கப்படுகிறது. [illegible] தனிப்பட்ட லே[illegible] முறை நீங்கி சர்க்கா[illegible] கடன முறை வரவேண்டும். சர்க்கார் இதுவரைஒருநனமையும்செய்யவில்லை, இனியும் செய்யப் போவதில்லை எனபதை இப்போதைய வரவுசெலவுத் திட்டம் நிரூபிக்கிறது. இதைமாற்றவேண்டுமானால் நீங்கள் ஒற்றுமையுடன் அணிவகுத்து ஒரே குரலை எழுப்பி ஸ்தாபன ரீதியாகப் போராட வேண்டும். நீங்கள் ஒன்று திரண்டு போராடாது போனால் நாங்கள் மட்டும் சட்டசபையில் பேசி[illegible] பயனில்லை. உங்கள் [illegible] தத்தால்தான் சர்க்கா[illegible] பணியவைக்க மு[illegible] நான் எந்தக் கட்சி[illegible] சேர்ந்தவன் என[illegible] நீங்கள் கவனிக்க வேண்[illegible] தில்லை. கீழ்த் தட்டிலு[illegible] மக்களை உயர்த்தும் நோக்[illegible] துடன் உண்மையுட[illegible] யுடனும் உழைக்க[illegible] சாயிகளின் ஊழி[illegible] டில் அறியாமை [illegible] ஞானம் ஓங்கி மக்[illegible] பெற எனனலான த[illegible] [illegible] த்தமாயிரு[illegible] [illegible] கூறி முடி[illegible]

கே. எம். சுந்தரம், தோழர் எம். சாத்தையா முதலியோர் பிரசங்கித்தனர். காலையில் திரு முத்திருளாண்டி சேர்வை தலைமையில் நடந்த விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் தோழர் ஆறுமுக நாடார் காரியதரிசியின் ஸ்தாபன அறிக்கையை வாசித்தார் [illegible] தீர்மானங்கள் [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிய நிர்வாகஸ்தர்கள்:

தோழர் ஆறுமுக நாடார்—தலைவர், (கடுக்காய்வலசை) தோழர் எம்.மூக்கையா(நாரல்) உபதலைவர், தோழர் ஜி. மங்களசாமி—(ராமநாதபுரம்)காரியதரிசி, தோழர் ஆர். ராமுனி (ராமநாதபுரம்) உபகாரியதரிசி. தோழர் கே. ராமு சேர்வை (ராமநாதபுரம்) பொக்கிஷதார். தோழர் மு. சு. முகமது இஸ்மாயில் (இருமேனி); கோவிந்தன் (காட்டுரணி); தங்கச்சாமித் தேவர் (உச்சிப்புளி); ராமையா (நைனுமரைக்கான்); லியாவுதீன் (பெருங்குளம்); முனியாண்டி (வேலாங்குளம்); சாமி ஐயாப்பிள்ளை (எருமைப்பட்டி); பாலகிருஷ்ணன (முதுநாள்); எம். சாத்தையா (அச்சுந்தன வயல்); ராமுத் தேவர் (ராஜசூரிய மடை); சுப்பையா சேர்வை(எக்ககுடி); முனியாண்டி—(கொடிக்குளம்) ஆர். வி. நாகலிங்கம்-(திருவுத்தரகேசமங்கை,; கிழவன-(கூரியூர்) வீரபத்திரன் (ரெகுநாதபடை) ஆகியோர் நிர்வாகக் குழு அங்கத்தினர்.

தோழர் கே. எம். சுந்தரம் வந்தனோபசாரம் கூறிய பிறகு மாநாட்டுப் பந்தலிலிருந்து தோழர் ராமுனி தலைமையில் மாபெரும் ஊர்வலம் விவசாய சங்கக் கொடி யேந்தி, "நீர்ப்பாசன வசதி யில்லாவிட்டால்- வரிக் கொடுக்கமாட்டோம்! அநியாய வரிகள் ஒழிக!" என்ற கோஷங்கள் விண்ணதிர முழங்கிக் கொண்டு அரணமனை வாசல் முன்பு பொதுக் கூட்டத்தில் முடிவுற்றது,

திரு. முத்திருளாண்டி சேர்வை தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. எஸ். பி. ஆதித்தன எம். எல். சி. பேசுகையில் காங்கிரஸ் சர்க்காரின் ஜன விரோதப் போக்கைக் கண்டித்தும் கடந்த ஐந்து வருஷங்களில் பட்டினிச் சாவுகளுக்கும் தற்கொலைகளுக்கும சர்க்கார் தான் பொறுப்பென்றும் சர்க்கார் இதை மூடி மறைக்கிறதென்றும் ஐக்கிய முன்னணி என்றால் என்னவென்பதை விளக்கிக் கூறுகையில் தங்கள் கையில் ஒரு ஜில்லாவை மட்டும் ஒப்புவித்திருந்தால் திறமையாக நடத்திக்காட்டியிருக்க முடியுமென்றும் கூறினார். மேலும் பேசுகையில் அன்று வெள்ளைக்காரனை வெளியேற்றவேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காகக் காங்கிரசோடு தாம் ஒத்துழைத்ததாயும் இப்பொழுது காங்கிரஸ் மக்களுக்கு நனமை செய்யவில்லை, இனியும் செய்யாது எனபதை உணர்ந்து முற்போக்கு சக்திகளுடன் ஒத்துழைப்பதாயும் கூறினர்.

புதிய வரியை எதிர்ப்போம்

ராஜா[illegible] மந்திரி சபை கொ[illegible] புதிய வரிகளைப்[illegible] சுகையில் ஏற்க[illegible] வரிச்சுமை ய[illegible] காண்டிருக்கை யி[illegible] லும் அவர்கள் மீது[illegible] சுமத்துவது அநியா[illegible] றும, மக்களின வாழ்க்கை த[illegible] தை உயர்த்தி வருமா[illegible] திற்கு வழி செய்து வைத்[illegible] பிறகு வரிப் போட்டால் மக்கள் கொடுப்பார்களென்றும் அப்படிச் செய்யாமல் வரியை மட்டும் போட்டு சர்க்காரை நடத்த எண்ணுவது பசுவுக்கு தீனி போடாமல் அதன மடியை அறுத்துப் பால் குடிப்ப[illegible] ஒக்கும் என்றார். (பலத்த [illegible] கோஷம்) குறிப்பாக பஸ் கட்டணத்தின மீது விதிக்கப்படும் உபரி வரியானது பொது மக்களைப் பெரிதும் பாதிக்[illegible] மென்றும் இதைப் பொது [illegible] முழு மூச்சுடன எதிர்க்[illegible] ணடு மென்றும் [illegible] ண டார். ராஜாஜி[illegible] மக்களின் நம்ப[illegible] திரமாகாத [illegible] என்பதற்கு ரா[illegible] [illegible] போன்ற 6, 7 [illegible] கொலு[illegible] விற்றிருச் [illegible] போது [illegible]

பி. ஆர்., மணலி சுற்றுப் பிரயாணம்

சென்னை, ஆக. 27—

தோழர்கள் பி. ராமமூர்த்தியும், மணலி கந்தசாமியும் ஆகஸ்ட் 28, 29, 30ம் தேதிகளில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

4 கிஸான் தலைவர்களின் தூக்குதண்டனையை ரத்துசெய்க!

பார்வார்ட் பிளாக் மகாநாட்டில் தீர்மானம்

பம்பாய், ஆக. 25—

உ. பி.யிலுள்ள பஸ்தி ஜில்லாவைச் சேர்ந்த 4 பார்வார்ட் பிளாக் கிஸான் தலைவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென இந்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, அகில இந்திய பார்வார்ட் பிளாக் பம்பாய் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

மேலும், தீவாந்திர தண்டனை. விதிக்கப்பட்டுள்ள 28 பார்வார்ட் கிஸான் தலைவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் கோரியிருக்கிறது. பம்பாய் அரசாங்கத்தின் பலகட்ட விற்பனை வரியை எதிர்த்து பலமான இயக்கம் நடத்தப்படும் எனவும் கூறியிருக்கிறது.

எல்லா இடதுசாரி கட்சிகளுடனும், பொருளாதாரப் பிரச்னைகளிலும், தொழிலாளி வர்க்கஇயக்கங்களிலும் ஒன்று சேர்ந்து போராடுவதென்றும் ஆனால் "கம்யூனிஸ்ட் கட்சியுடன் அரசியல் பிரச்னைகளில் தொடர்பு கிடையாது" என்றும் தீர்மானித்திருக்கிறது.

பம்பாயில் உள்ள சில தொழிற்சங்க வாதிகள் பம்பாய் ராஜ்யத்திலுள்ள மத்திய அரசாங்க ஊழியர்களின தொழிற் சங்க ஸ்தாபனங்களை ஒன்று சேர்த்து வேலை செய்வதென முடிவு செய்திருப்பதை வரவேற்று, இதற்குப்பூரண ஒத்துழைப்பு அளிக்கவேண்டுமென எல்லா யூனிட்டுகளுக்கும் அறிவித்துள்ளது.

பெப்சுவில் நிலச்சுவான்தாரி முறை ஒழிப்பு

பாட்டியாலா, ஆக. 25—

நிலச்சுவானதாரி முறையை ஒழிப்பது பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள கமிட்டியின் அறிக்கையை பெப்சு சர்க்கார், பரிசிலனை செய்தது எனவும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், இது பற்றிய மசோதா தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும் இன்று, பெப்சு முதலமைச்சர் சர்தார் கியான் சிங்ரேரி வாலா அறிவித்தார்.

பத்திராதிபர் மகாநாட்டு வரவேற்புக் கமிட்டி

புதுடில்லி, ஆக. 26—

செப்டம்பர் 16, 17 தேதிகளில் டில்லியில் நடைபெறப் போகும் அகில இந்திய பத்திராதிபர்கள் மகாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கா[illegible] மக்கப்பட்ட வரவேற்[illegible] அங் கத்தின[illegible] பெற றது. [illegible] ண்ட வர்களைக்[illegible] யாகக் கமிட்[illegible] டது. திரு. [illegible] ர் வரவேற்புக் கமிட்டி தலைவராகவும், [illegible] நரேந்திரா, யூனஸ் டெல்[illegible] செயலாளர், பொருளாளராக தே[illegible] தடுக்கப்பட்டனர்.

விஜயவாடாவில் மலிவு தானியக் கடையில் அரிசிவிலை ஏறுகிறது!

ஒரு மூட்டைக்கு ரூ. 7-11-0 சர்சார்ஜ்

விஜயவாடா, ஆக. 25—

சென்ற வார ஆரம்பத்திலிருந்து மலிவுவிலைக் கடைகளில் அரிசியின் விலை ஒரு சேர் 7½ அணாவிலிருந்து 8 அணாவாக ஏறிவிட்டது. இந்த திடீர் விலையேற்றம்பற்றி விசாரித்தபோது கிருஷ்ணா ஜில்லா மத்திய கூட்டுறவு ஸ்டோர்ஸின் (இதுதான் விஜயவாடா நகரின் நியாயவிலைக் கடைகளுக்கு மொத்த வியாபாரம் செய்யும் டிப்போவாகும்) காரியதரிசி பின்வரும் புள்ளி விவரங்களைக் கொடுத்தார். இவ் விவரங்கள், தானிய மில்லிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு வருவதற்குள் வாங்குவோரின் மீது வரிப்பளு எவ்வளவு அதிகமாய் போடப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்தும்.

	ரூ.	அ.	பை.
மணங்குக்கு ரூ. 13.4.3 விதம் 3 மணங்குக்கு மில் வாசல் விலை	39	12	9
மணங்குக்கு 5 அணா விதம் நிர்வாக சர்சார்ஜ்	0	15	0
மானய சர்சார்ஜ், மணங்குக்கு ரூ. 2-4-0 விதம்	6	12	0
சர்சார்ஜுகள்மீது விற்பனை வரி	0	2	0
மொத்த வியாபாரியின் லாபம்	0	10	6
மொத்தவியாபாரியின் போக்குவரத்து செலவுகள்	1	10	0
மொத்த வியாபாரி தரும் விற்பனைவரி	0	12	9
சில்லரை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரியின் விற்பனை விலை	50	11	0
ஒருமுறை உபயோகப்படுத்தப்பட்ட சாக்கின்விலை	1	7	8
சில்லரை வியாபாரியின் லாபம்	0	12	0
விற்பனை வரி	0	13	6
108 சேர் உள்ள, 3 மணங்கு கொண்ட ஒரு மூட்டை விலை	53	12	2

ஒரு சேரின் விலை ரூ. 0-7-11 என்பதை ரூ. 0-8-0 ஆக்கி நியாய விலைக் கடைகளில விற்கிறார்கள்.

மில்லிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு வருவதற்குள் வாங்குவோர் 108 சேர் கொண்ட ஒரு மூட்டைக்கு ரூ. 13-15-5 அதிகமாகத் தரவேண்டியிருக்கிறது. இதில் ரூ. 7-11-0 நிர்வாக, மான்ய சர்சார்ஜுகளாகவும், ரூ. 1-12-3 மூன்று தடவைகளில் விற்பனை வரியாகவும், ரூ. 1-7-8 சாக்கின் விலையாகவும் தரவேண்டியிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த அளவுக்கு மீறிய வரிப்பளுவைத் தாங்க முடியாத வாங்குவோர், ஒரு ஜில்லாவில் விளைந்த அரிசியை அதே ஜில்லாவில் விற்பதற்காக ரூ. 7-11-0 விதிப்பதில் அர்த்தமில்லை எனப் புகார் செய்கிறார்கள். இம்மாதிரி அரிசி மீது மறைமுகமாக வரி விதிக்கும் கொள்கையை அரசாங்கம் மாற்றிக்கொண்டு, விற்பனை விலையை ஒரு நியாயமான விலைக்குக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாரம் குத்தகைதாரர்களை நீக்கும் உரிமை உண்டு

நிலச்சுவான்தார்களுக்கு ராஜாஜியின் வாக்குறுதி

திருவாரூர், ஆக 27—

நேற்றிரவு இங்கு நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் வாரம் குத்தகைதாரர்களுக்கும் பண்ணையாட்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் அவசரச் சட்டம் தாற்காலிகமானதல்லவென்றும் அது நிரந்தரமாக இருக்க வேண்டுமென்றும் கூறினர்.

இந்த அவசரச் சட்டம் சாகுபடியாளருக்கு உதவி அளிப்பதுடன் மிராசுதார்களை அது பாதிக்கவில்லை என்றும் கூறினர். சென்றதை மக்கள் மறந்துவிட்டு நிலச்சுவானதார்களும் சாகுபடியாளரும், விவசாயத் தொழிலாளர்களும் மனப்பூர்வமாக ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

கம்யூனிஸ்டுகள் தங்களுடைய கிளர்ச்சியின மூலம இந்தச் சட்டம் வந்ததாக உரிமை கொண்டாடுகிறார்கள். தங்களுடையது என்று உரிமை பாராட்டும் இந்தச் சட்டத்தின விஷயத்திலாவது அவர்கள் குற்றங் குறைகள் கண்டுபிடிக்கமாட்டார்களென்பதற்காக நான விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன. அவர்களும் இதை அமுல் நடத்த ஒத்துழைப்பார்களென்று நம்புகிறேன.

காலையில் தஞ்சை மிராசுதார்களைத்தான் சந்தித்ததாகவும், அவர்கள் இந்தச் சட்டத்தை வரவேற்பதுடன ஒத்துழைக்கவும் வாக்களித்துள்ளதாகக் கூறினர்.

நீக்கப்பட்ட பழைய வாரங் குத்தகைதாரர்களை மீண்டும் அமர்த்த வேண்டும் அவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

வாரங் குத்தகைதாரர்கள் நல்ல முறையில் நடந்துகொள்ளாவிட்டால் அவசரச் சட்டத்திலேயே பரிகாரம் கூறப்பட்டிருக்கிறது. சாகுபடியாளர்கள் மீது குற்றச்சாட்டுகள் கோர்ட்டில் ருசுப்படுத்தப்பட்டால் அவர்களை வெளியேற்றி விடலாம். அதனாலே இந்தச் சட்டம் சாகுபடியாளருக்கு உதவிகரமாகவும் மிராசுதார்களுக்குத் தீங்கிழைக்காமலும் இருப்பதாக ராஜாஜி கூறினர்.

சீனமக்களுக்கு துர்க்காபாய் பாராட்டு

சென்னை, ஆக. 26—

[illegible] தேசியப் பொருளாதார [illegible] த்தியில் சின மக்கள் [illegible] கருத்துமாயிருக்கி[illegible] [illegible] ாதுமக்கள் தங்கள் [illegible] ணர்ந்து அபிவிருத் [illegible] ங்களுடன பங்கும் [illegible] றார்கள்" என்று [illegible] இந்திய திட்டக் [illegible] வினரான திரு [illegible] சென்னபுரி [illegible] ண சபாவில் [illegible] குறிப்பிட்டார்

நில அவசரச் சட்டப்படி

ரெவினியூ கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டன

சென்னை, ஆக. 26—

ஆக. 23ல் பிறப்பிக்கப்பட்ட தஞ்சாவூர் வார-குத்தகைதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தின்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக, சென்னை அரசாங்கம் ரெவின்யூ கோர்ட்டுகளை ஏற்படுத்தியிருக்கிறது.

கீழ்க்கண்ட இடங்களில் கோர்ட்டுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது:—திரு. பி. எஸ். தங்கமணி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி (சீர்காழி தாலுகா), திரு. எஸ். மணி, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி (மாயூரம் தாலுகா), திரு. தொ. மு. பாஸ்கரத தொணடைமான, ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி (கும்பகோணம் தாலுக்கா).

நில அவசரச் சட்டத்தை கிருஷிக்லோக் கட்சி வரவேற்கிறது!

சென்னை, ஆக. 26—

ஆந்திரா கிருஷிக் லோக் கட்சி, காரியதரிசி திரு. வி.வி. ரமணா, தஞ்சாவூர் வார—குத்தகைதார், பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை வரவேற்றுப் பேசியிருக்கிறார். தஞ்சாவூர் ஜில்லாவைப் போன்ற நிலைமையே ஏனைய பகுதிகளிலும் நிலவுவதால் இந்தச் சட்டத்தை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென அவர் கோரினர்.

இளம் பெண்ணின் கோர மரணம்

சென்னை, ஆக. 27—

சிந்தாதிரிப்பேட்டையில் அருணாசல நாயக்கன தெருவும் காலவப்பன் செட்டி தெருவும் சந்திக்கும் இடத்தில் சர்க்கார் பஸ் ஒன்று 20 வயது [illegible] இந்திராணி என்னும் [illegible] மீது மோதியது. [illegible] காயத்திற்கு உள் [illegible] ண் ஆஸ்பத் [illegible] செல்லப் [illegible] ரமடைந் [illegible] டையி [illegible] ங்கிக் [illegible] ப்பத்தி [illegible] து.

வானொலி

ஆகஸ்டு—29, வெள்ளி

சென்னை (41·32மீ)

காலை
- 7-00 மங்களம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 டி. ஆர். [illegible] --பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்
- 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
- 1-00 [illegible]
- 1-30 [illegible]
- 1-40 ஹிந்தியில் செய்தி
- 1-50 [illegible]
- 2-00 தமிழில் செய்தி
- 2-10 [illegible]
- 2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை
- 4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
- 4-30 ஐரோப்பிய சங்கீதம்
- 5-30 [illegible]
- 6-00 ஆங்கிலத்தில் செய்தி
- 6-15 [illegible]
- 6-20 ஆர். கண்ணன் --பாட்டு
- 7-00 பாலசரஸ்வதி, ராஜேஸ்வரராவ் (இசைத்தட்டு)
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 எம். எம். தண்டபாணி தேசிகர் (ஒலிப்பதிவு)
- 7-45 ஜந்த்ர சம்மேளனம்
- 8-00 குரல் வகை
- 8-15 வி. சூடாமணி --பாட்டு
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 சர்வதேசச் சட்டம் --பேச்சு
- 9-30 நேயர் விருப்பம்
- 10-00 அன்னமாச்சார்யுல கீர்த்தனமுலு

★

திருச்சி (389·6மீ)

காலை
- 7-10 கீதாரம்பம்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 சுவாமிநாதய்யர் --பாட்டு
- 8-00 ஆங்கிலத்தில் செய்தி
- 8-15 சித்ரகானம்

பகல்
- 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு
- 1-00 கதம்பம்
- 1-40 நேயர் விருப்பம்
- 1-50 வாத்ய இசை
- 2-00 தமிழில் செய்தி
- 2-10 எச். வி. எம். வாத்ய கோஷ்டி
- 2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை
- 4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
- 5-30 எஸ். அபிராமசுந்தரம் பிள்ளை--நாகஸ்வரம்
- 5-45 இசைப் பயிற்சி
- 6-05 அறிவிப்புகள்
- 6-10 நீங்கள் கேட்டவை
- 6-30 கிராம நிகழ்ச்சிகள்
- 7-15 தமிழில் செய்தி
- 7-30 மன நிழல் --சிறு கதை
- 7-45 இலக்கிய வாசகம்
- 8-00 சுவாமிநாதய்யர் --பாட்டு
- 8-30 குரல் வகை
- 9-00 ஆங்கிலத்தில் செய்தி
- 9-15 எம். அபிராம சுந்தரம் பிள்ளை--நாகஸ்வரம்

பஞ்சாலைத் தொழிலாளருக்கு போனஸ் கொடு!

செங்கோட்டை, ஆக. 24—

செங்கோட்டை வண்டிமலைச்சியம்மன் கோவில் முன்பாக 22.8.52 மாலை 7-மணிக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், இதர கட்சிகளின் சார்பிலும் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தோழர் கே. சட்டநாதன எம். எல். ஏ. தலைமை வகித்தார். தோழர்கள் எம். காமாட்சி, வி. ஆர். ராஜகு, சுப்ரமணயம், கனகம், கணபதி, செண்பகம் முதலியோர் பேசியபின்,

தடுப்புக்காவல் சட்டத்தை ரத்து செய்யும்படியும், திருவொச்சியில் 'ரைஸ் மில்' ஓட்டுவதற்கு சர்க்கார் அனுமதி கொடுக்கக் கூடாதென்றும், செங்கோட்டை தாலுகாவிலிருந்து சோளம் மற்ற தாலுகாக்களுக்குக் கொண்டு செலல சர்க்கார் பர்மிட் கொடுக்கக் கூடாதென்றும், புதிய வரிகளை ரத்து செய்ய வேண்டுமென்றும், செங்கோட்டை பஞ்சாலைத் தொழிலாளிகளுக்கு வருஷாந்திர போனஸ் கொடுக்கும்படி நிர்வாகத்தை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

சியாங் கொள்ளைக் கும்பலுக்குள் சண்டை 50 பேர் மரணம்

ரங்கூன், ஆக 26—

பர்மாவின் கிழக்கெல்லையில் உள்ள துரோகி சியாங் கேஷேக்கின் துருப்புகளுக்கிடையே போர் மூணடு, 50 பேர்கள் கொல்லப்பட்டார்கள் என்று தகவல் எட்டியுள்ளது.

சியாங்கின் தளபதிகளான லி-மிக்கும், லு-கு வோ சுவானுக்குமிடையே தகராறு ஏற்பட்டுள்ளது. லி-மியின தலைமையை உதறித் தள்ளிவிட்டு லு-கு வோ சுவான் வேறோரிடத்தில் தன் ராணுவத் தலைமைக் காரியாலயத்தை நிறுவியுள்ளானாம்.

சியாங்கின் 8வது ராணுவத்தின் உதவி தளபதியான ஜெனரல் லி-மி, சீன மக்கள் விடுதலை சைன்யத்தால் நொறுக்கடபட்டு, அலங்கோலமாக 1948ல் பர்மா எல்லைக்குள் அடைக்கலம் புகுந்து கொண்டதும், அங்கிருந்து கொண்டு அடிக்கடி மக்கள் சீனாவுக்குள் கொரில்லா போர் நடத்த முயற்சித்ததும் உலகம் அறியும்.